# சோதிடமலர்

# SOTHIDA MALAR




## உள்ளே!

**இம்மாதம் உங்களுக்கு எப்படி?**

- ★ ராகு கேது பற்றிய விளக்கம்
- ★ ஜன்ம லக்கினம்
- ★ தமிழ் ஈழம் மலருமா?
- ★ வளரும் விண்ணியல்
- ★ அதிஷ்ட எண் ஞானம்
- ★ சோதிட மகாநாடு

இன்னும் பல

துந்துபி ஆவணி (17-8-82—16-9-82) ரூபா 3-00

உ

# சோதிடமலர்

## மாத சஞ்சிகை

ஆசிரியர்: பிரம்மஸ்ரீ கி. சதாசிவசர்மா (சம்ஸ்கிருத பண்டிதர்)

மலர் 5 | துந்துபி ஞூ ஆவணி மீ (17-8-1982) | இதழ் ১

சூர்யம் சுந்தர லோகநாத மம்ருதம்
வேதாந்த சாரம் சிவம்
ஞானம் ப்ரஹ்ம மயம் சுரேசமமலம்
லோகைக சித்தம் பரம்
இந்திராதித்ய நராதிபம் சுரகுரும்
த்ரைலோக்ய சூடாமணிம்
ப்ரஹ்ம விஷ்ணுசிவ ஸ்வரூப ஹ்ருதயம்
வந்தே சதா பாஸ்கரம் | |

பூவினையகன் பூமகள் நாயகன்
காவினையக ஞதிக்கடவுளார்க்
காவினையகன் அங்கயர்க்கண்ணி
மாதேவிநாயகன் சேவடியேத்துவாம்.

நெல்லைக் குற்றும்போது அவ்வப்போது குற்றுவதை நிறுத்திவிட்டு உமி போயிற்ரு என்று பார்ப்பதுபோல மனதை அடிக்கடி நன்கு சோதித்துக் கொள்ளவேண்டும்.

— ஸ்ரீராமகிருஷ்ணர்

## இந்த இதழில்......................

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | நாள் எப்படி | ... | 2 |
| 2 | உதயலக்கினம் காணும் பதகம் | ... | 4 |
| 3 | ஆவணி மாதக் கிரகநிலை | ... | 5 |
| 4 | கால ஹோரைகள் | ... | 6 |
| 5 | ஆவணி மாத வானியற்காட்சி | ... | 7 |
| 6 | இம்மாதம் உங்களுக்கு எப்படி? | ... | 8 |
| 7 | தமிழ் ஈழம் மலருமா? | ... | 17 |
| 8 | ஜன்மலக்னம் | ... | 19 |
| 9 | பிறந்த திகதிப் பலன் | ... | 20 |
| 10 | அதிஷ்ட எண் ஞானம் | ... | 21 |
| 11 | சதாவதானி கதிரவேற்பிள்ளை | ... | 24 |
| 12 | வளரும் விண்ணியல் | ... | 26 |
| 13 | மட்டுநகர் சோதிடமகாநாடு | ... | 28 |
| 14 | அன்னையைக் கண்டேன் | ... | 31 |
| 15 | ஆய்வு மன்றம் | ... | 33 |
| 16 | குறுக்கெழுத்துப் போட்டி | ... | 36 |

# நாள் எப்படி?

ஆவ 1 செவ் (17-8-82) திரயோதசி பகல் 2-23 வ. புனர்பூசம் காலை 9-12 வரை சித்தம். வயல், தோட்டச்செய்கை போன்ற பூமி சம்பந்தப்பட்ட கருமங்களை பகல் 2–23க்கு முன் செய்யலாம்.

ஆவ 2 புதன் (18-8-82) சதுர்த்தசி பகல் 11-15 வரை, பூசம் காலை 6-52 வரை. இதன் மேல் ஆயிலியம், பி. இ. 4-39 வரை சித்தம். அமாவாசை விரதம். பிதுர் வழிபாட்டால் சந்ததி விருத்தி உண்டாகும். சுபகருமங்களை விலக்குக.

ஆவ 3 வியா (19-8-82) அமாவாசை காலை 8-16 வரை, அதன்மேல் பிரதமை பி. இ. 5-33 வரை, மகம் இரவு 2-41 வரை அமிர்தசித்தம். காலை 8-16இன் மேல் பொதுவாக எல்லாச் சுபகருமங்களையும் செய்யலாம்,

ஆவ 4 வெள் (20-8-82) துவிதியை பி. இ. 3-18 வரை, பூரம் இரவு 1-08 வரை சித்தம். புதிய கருமங்களை விடுத்து அன்றாட கருமங்களை இறைவன் வழிபாட்டுடன் செய்யவும். இரவு 1-08ன் மேல் சுபகருமங்கள் செய்யலாம்.

ஆவ 5 சனி (21-8-82) திருதியை இரவு 1-34 வ. உத்தரம் இரவு 12-10 வரை, மரணயோகம். இன்று முழுவதும் சுபகருமங்களை விலக்குக.

ஆவ 6 ஞா (22-8-82) சதுர்த்தி இரவு 12-38 வ. அத்தம் இரவு 11-53 வரை, அமிர்தசித்தம். விநாயக சதுர்த்தி விரதம். விநாயகப் பெருமானை மெய்யன்புடன் வழிபடுவதால் அஞ்ஞானம் நீங்கும். சுபகருமங்களுக்கு ஏற்ற தினமன்று. அவசிய கருமங்களை இரவு 12-38இன் மேல் செய்க.

ஆவ 7 திங் (23-8-82) பஞ்சமி இரவு 12-26 வரை, சித்திரை - மரணம் இரவு 12-22 வரை, இரவு 12–22 இன் மேல் சுபகருமங்கள் செய்யலாம்.

ஆவ 8 செவ் (24-8-82) ஷஷ்டி இரவு 1-03 வ. சுவாதி-சித்தம் இரவு 1–38 வரை ஷஷ்டி விரதம் பயிர்ச்செய்கை, தோட்டம் முதலியன செய்யலாம்.

ஆவ 9 புத (25-8-82) ஸப்தமி இரவு 2-24 வரை விசாகம் பின்னிரவு 3-38 வரை, சித்தாமிர்தம். பொதுவாக சுபகருமங்ளுக்கு ஏற்ற தினமன்று.

ஆவ 10 வியா (26-8-82) அஷ்டமி பி. இ. 4–23 வரை, அனுஷம் - சித்தம் முழுவதும். சுபகருமங்களை விலக்குக.

ஆவ 11 வெள் (27-8-82) நவமி முழுவதும், அனுஷம் - சித்தம் காலை 6-14 வரை, சுபகருமங்களை விலக்குக.

ஆவ 12 சனி (28-8-82) நவமி காலை 6-48 வரை, கேட்டை காலை 9-12 வரை, சித்தம். ஆவணி மூலம்.

ஆவ 13 ஞாயி (29-8-82) தசமி காலை 9-23 வரை, மூலம் பகல் 12-21 வரை, அமிர்தசித்தம். விவாகம் விவாகப்பதிவு போன்ற சுபகருமங்களை பகல் 12-21 க்கு முன் செய்க.

ஆவ 14 திங் (30-8-82) ஏகாதசி பகல் 11-54 வ. பூராடம் பி. ப. 3-21 வரை, மரணயோகம். சர்வ ஏகாதசி விரதம். சுபகருமங்களை விலக்குக.

ஆவ 15 செவ் (31-8-82) துவாதசி பகல் 2-08 வ. உத்தராடம், மரணம், மாலை 6-06 வரை. பிரதோஷ விரதம் மாலை சிவதர்சனத்தால் பாபங்கள் நீங்கும்.

ஆவ 16 புத (1-9-82) திரயோதசி பி. ப. 3-56வ. திருவோணம் – சித்தம் இரவு 8-25 வரை. ஆவணி ஓணம், இரவு 3-56 இற்குள் கிரகப் பிரவேசம், விவாகம், விவாகப் பதிவு முதலிய சுபகருமங்கள் செய்ய நன்று.

ஆவ 17 வியா (2-9-82) சதுர்த்தசி மாலை 5-12 வ. அவிட்டம் இரவு 10-12 வரை நடேசர் அபிஷேகம். சுபகருமங்களை விலக்குக.

ஆவ 18 வெள் (3-9-82) பூரணை மாலை 5–59 வரை, சதயம், இரவு 11-30 வரை, சித்தம், பூரணை விரதம். பொதுவாக சுபகருமங்களுக்கு ஏற்ற தினம்.

ஆவ 19 சனி (4-9-82) பிரதமை மாலை 6–13 வ. பூரட்டாதி-மரணம் இரவு 12-17 வரை, மஹாளய பக்ஷாரம்பம். இன்று பிதுர் வழிபாட்டுக்குரிய தினம் ஆரம்பிக்கின்றது.

ஆவ 20 ஞாயி (5-9-82) துவிதியை மாலை 5-59 வ. உத்திரட்டாதி இரவு 12-38 வரை, அமிர்தம், பொதுவாக எல்லா சுபகருமங்களையும் செய்யலாம்.

ஆவ 21 திங் (6-9-82) திரிதியை மாலை 5-21 வரை, ரேவதி. இரவு 12-35 வரை, சித்தம் சங்கட சதுர்த்தி. மாலை 5–21 வரை, புதிய கருமங்களை மேற்கொள்ளலாம்.

ஆவ 22 செவ் (7-9-82) சதுர்த்தி மாலை 4-22 வ. அசுவினி இரவு 12-14 வரை, அமிர்தசித்தம். சுபகருமங்களை விலக்குக.

ஆவ 23 புத (8-9-82) பஞ்சமி பி. ப. 3-05 வரை, பரணி இரவு 11-35 வரை சித்தாமிர்தம். சுப கருமங்களை விலக்குக.

ஆவ 24 வியா (9-9-82) ஷஷ்டி பகல் 1-33 வரை, கார்த்திகை இரவு 10.42 வரை; மரணம். கார்த்திகை விரதம். முருகப்பெருமானை வழிபடுவதால் வெற்றி உண்டாகும். சுபகருமங்களை விலக்குக.

ஆவ 25 வெள் (10-9-82) ஸப்தமி பகல் 11-50 வ. ரோகிணி - மரணம் இரவு 9-36 வரை, மஹாலக்ஷ்மி விரதம், ஸ்ரீ ஜெயந்தி. இத் தினமே கிருஷ்ணர் அவதாரம் செய்த தினமாகும். இத் தினத்தில் மஹாவிஷ்ணு வழிபாடு நன்மைதரும்.

ஆவ 26 சனி (11-9-82) அஷ்டமி காலை 9-49 வ. மிருகசீரிடம் இரவு 8-17 வரை. சித்தம். சுபகருமங்களை விலக்குக.

ஆவ 27 ஞா (12-9-82) நவமி காலை 7-38 வரை, இதன் மேல் தசமி. பின்னிரவு 5-18 வரை, திருவாதிரை மாலை 6-47 வரை, சித்தம். அவசிய கருமங்களை மாலை 6-47 இன் மேல் செய்க.

ஆவ 28 திங் (13-9-82) ஏகாதசி பி. இ. 2-53 வரை, புனர்பூசம் - அமிர்தம் மாலை 5-1[illegible] வரை, அதன் மேல் மரணம் இரவு 2-53 வரை. சர்வ ஏகாதசி விரதம். விஷ்ணு வழிபாட்டால் பாபங்கள் நீங்கும்.

ஆவ 29 செவ் (14-9-82) துவாதசி இரவு 12-23 வரை, பூசம் பி. ப. 3-27 வரை, சித்தம். யதி மஹாளயம். (சந்நியாசியாக இருந்து இறந்தவர்களுக்கு மஹாளயம் செய்யும் தினம்.

ஆவ 30 புதன் (15-9-82) திரயோதசி இரவு 9-56 வரை, ஆயிலியம், பகல் 1-44 வரை, சித்தம். பிரதோஷ விரதம். மாலை சிவதரிசனத்தால் பாபங்கள் நீங்கும்.

ஆவ 31 வியா (16-9-82) சதுர்த்தசி இரவு 7-39 வரை, மகம் பகல் 12-09 வரை, அமிர்தசித்தம். சஸ்திரஹத மஹாளயம், (ஆயுதங்களினால் இறந்தவர்களுக்கு இன்று மஹாளயம் செய்க)

# ஆவணித் திருநாள்

ஆவணி மாதம் பிறந்ததும் சிவ, விநாயக, கிருஷ்ண பக்தி ஆகிய மூன்றும் ஒன்றுசேர்கின்றது. ஆவணி மூலம் சிவனுக்குரிய சிறப்பையும், ஆவணிச் சதுர்த்தி விநாயகப் பெருமானைக் குறிக்கும் விரத மேன்மையையும், கிருஷ்ணபக்ஷ அஷ்டமித்திதி, ஸ்ரீ கிருஷ்ணபகவானின் அருட்சிறப்பையும் கொண்டுள்ளது ஆவணி மாதம். மேலும் எமது பிரத்யக்ஷ தெய்வமாகும் சூரியபகவானின் வழிபாட்டுக்குரிய ஞாயிறு வாரமும் சிறப்பம்சம் பெறுவதும் ஆவணி மாதத்திற்கு மேன்மேலும் மெருகுண்டாகிறது எனலாம்.

மதுரையில், சொக்கலிங்கப் பெருமான் திருவாதவூரருக்காக குதிரைவர்த்தகராக எழுந்தருளிய தினமே ஆவணிமூலம் எனும் நன்னாளாம் எனப் புராணங்கள் கூறுகின்றன. இம்மூலத் திருநாள் அசுரசக்திகளை அழிப்பதற்கு துணைசெய்யும் எனக் கருதவுமிடமுண்டு. இருபத்தியேழு நட்சத்திரங்களுள் ஒன்றாகிய மூலநட்சத்திரத்தின் அதிதேவதை நிருதி என்னும் அசுரனாகும். தெய்வசக்தி அசுரசக்தி என்னுமிரண்டினுள் ஆன்மாக்களின் அருள்வளர்ச்சிக்கு காரணம் தெய்வசக்தி என்றும் மற்றது ஆன்மமுன்னேற்றத்தைத் தடுக்கக்கூடியதாகவும் கொள்ளும்போது தெய்வ சக்தியைப் போற்றும் விழாக்களைக் கொண்டாடுவதால் அசுரசக்தி பலம் குன்றிவிடுகிறது. இதையே ஆவணிமூல விழாவும் குறிக்கின்றது. ஆவணிமாத பூர்வபக்கச் சதுர்த்தித்திதியில் தோன்றிய விநாயகர். சதுர்த்தித் திதிசம்பவ என்னும் சதுர்த்தீ பூஜனபிரீத என்றும் சகஸ்ரநாமத்தில் போற்றப்படும் விநாயகப் பெருமானுக்குரிய சிறந்த விரதம் ஆவணிச் சதுர்த்தியாகும். தேவர்களைக் காப்பாற்றுவதற்காக பிரணவவடிவினனாகிய விநாயகப் பெருமான் தோன்றியதினம் ஆவணிமாதப் பூர்வபக்கசதுர்த்தி ஆதலால் மற்றைய மாதச்சதுர்த்தியிலும் பார்க்க முதன்மை பெறுகிறது.

கோகுலாஷ்டமி ஸ்ரீ ஜயந்தி என்றெல்லாம் சிறப்புறக் கூறப்படும் கிருஷ்ண ஜயந்தி ஆவணி மாத கிருஷ்ணபக்ஷ அஷ்டமி திதியாகும். ரோகிணி நட்சத்திரத்துடன் கூடிய இரவு வியாபகமுடைய அஷ்டமித் திதியில் கிருஷ்ணன் பிறந்தான் என்பது புராணவரலாறு. இம்மாதம் 25-ந் திகதி (12-9-82) வெள்ளிக்கிழமையே கிருஷ்ண ஜயந்திக்குரிய தினமாகும். நாமும் இத்தினத்தில் கிருஷ்ண பரமாத்மாவை வழிபட்டு எமது பாவப் பிணிகளை நீக்குவோமாக!

ஆ—ர்

# உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

## துந்துபி ஞு ஆவணி மீ 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை. (17-8-82 முதல் 16-9-82 வரை)

| ஆங | தமி | வாரம் | சிங்கம் | | கன்னி | துலாம் | விருச்சி | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் | கடகம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகஸ் | ஆவ | | ம.மி. முதல் (காலை) | ம.மி. வரை | ம. மி. வரை (காலை) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பி.ப) | மி. ம. வரை (மாலை) | ம. மி. வரை (மாலை) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை (பி.இ) |
| 17 | 1 | செவ் | 6 05 | 8 05 | 10 04 | 12 08 | 2 19 | 4 27 | 6 23 | 8 07 | 9 50 | 11 39 | 1 43 | 3 53 | 6 01 |
| 18 | 2 | புதன் | 6 01 | 8 01 | 10 0 | 12 04 | 2 14 | 4 23 | 6 19 | 8 03 | 9 46 | 11 35 | 1 39 | 3 49 | 5 57 |
| 19 | 3 | வியா | 5 57 | 7 57 | 9 56 | 12 00 | 2 10 | 4 19 | 6 15 | 7 59 | 9 42 | 11 31 | 1 35 | 3 45 | 5 53 |
| 20 | 4 | வெள் | 5 53 | 7 53 | 9 52 | 11 56 | 2 06 | 4 15 | 6 11 | 7 55 | 9 38 | 11 27 | 1 31 | 3 41 | 5 49 |
| 21 | 5 | சனி | 5 49 | 7 50 | 9 49 | 11 53 | 2 03 | 4 12 | 6 08 | 7 52 | 9 35 | 11 24 | 1 28 | 3 38 | 5 46 |
| 22 | 6 | ஞாயி | 5 46 | 7 46 | 9 45 | 11 49 | 1 59 | 4 08 | 6 04 | 7 48 | 9 31 | 11 20 | 1 24 | 3 34 | 5 42 |
| 23 | 7 | திங் | 5 42 | 7 42 | 9 41 | 11 45 | 1 55 | 4 04 | 6 00 | 7 44 | 9 27 | 11 16 | 1 20 | 3 30 | 5 38 |
| 24 | 8 | செவ் | 5 38 | 7 38 | 9 37 | 11 41 | 1 51 | 4 00 | 5 56 | 7 40 | 9 23 | 11 12 | 1 16 | 3 26 | 5 34 |
| 25 | 9 | புதன் | 5 34 | 7 34 | 9 33 | 11 37 | 1 47 | 3 56 | 5 52 | 7 36 | 9 19 | 11 08 | 1 12 | 3 22 | 5 30 |
| 26 | 10 | வியா | 5 30 | 7 30 | 9 29 | 11 33 | 1 43 | 3 52 | 5 48 | 7 32 | 9 15 | 11 04 | 1 08 | 3 18 | 5 26 |
| 27 | 11 | வெள் | 5 26 | 7 26 | 9 25 | 11 29 | 1 39 | 3 48 | 5 44 | 7 28 | 9 11 | 11 00 | 1 04 | 3 14 | 5 22 |
| 28 | 12 | சனி | 5 22 | 7 22 | 9 21 | 11 25 | 1 35 | 3 44 | 5 40 | 7 24 | 9 07 | 10 56 | 1 00 | 3 10 | 5 18 |
| 29 | 13 | ஞாயி | 5 18 | 7 19 | 9 18 | 11 22 | 1 32 | 3 41 | 5 37 | 7 21 | 9 04 | 10 53 | 12 57 | 3 07 | 5 15 |
| 30 | 14 | திங் | 5 15 | 7 15 | 9 14 | 11 18 | 1 28 | 3 37 | 5 33 | 7 17 | 9 00 | 10 49 | 12 53 | 3 03 | 5 11 |
| 31 | 15 | செவ் | 5 11 | 7 11 | 9 10 | 11 14 | 1 24 | 3 33 | 5 29 | 7 13 | 8 56 | 10 45 | 12 49 | 2 59 | 5 07 |
| செப் 1 | 16 | புதன் | 5 07 | 7 06 | 9 05 | 11 09 | 1 19 | 3 28 | 5 24 | 7 08 | 8 51 | 10 40 | 12 44 | 2 54 | 5 02 |
| 2 | 17 | வியா | 5 02 | 7 02 | 9 01 | 11 05 | 1 15 | 3 24 | 5 20 | 7 04 | 8 47 | 10 36 | 12 40 | 2 50 | 4 58 |
| 3 | 18 | வெள் | 4 58 | 6 58 | 8 57 | 11 01 | 1 11 | 3 20 | 5 16 | 7 00 | 8 43 | 10 32 | 12 36 | 2 46 | 4 54 |
| 4 | 19 | சனி | 4 54 | 6 54 | 8 53 | 10 57 | 1 07 | 3 16 | 5 12 | 6 56 | 8 39 | 10 28 | 12 32 | 2 42 | 4 50 |
| 5 | 20 | ஞாயி | 4 50 | 6 50 | 8 49 | 10 53 | 1 03 | 3 14 | 5 08 | 6 52 | 8 35 | 10 24 | 12 28 | 2 38 | 4 46 |
| 6 | 21 | திங் | 4 46 | 6 46 | 8 45 | 10 49 | 12 59 | 3 10 | 5 04 | 6 48 | 8 31 | 10 20 | 12 24 | 2 34 | 4 42 |
| 7 | 22 | செவ் | 4 42 | 6 42 | 8 41 | 10 45 | 12 55 | 3 06 | 5 00 | 6 44 | 8 27 | 10 16 | 12 20 | 2 30 | 4 38 |
| 8 | 23 | புத | 4 38 | 6 38 | 8 37 | 10 41 | 12 51 | 3 02 | 4 56 | 6 40 | 8 23 | 10 12 | 12 16 | 2 26 | 4 34 |
| 9 | 24 | வியா | 4 34 | 6 34 | 8 33 | 10 37 | 12 47 | 2 58 | 4 52 | 6 36 | 8 19 | 10 08 | 12 12 | 2 22 | 4 30 |
| 10 | 25 | வெள் | 4 30 | 6 31 | 8 30 | 10 34 | 12 44 | 2 55 | 4 49 | 6 33 | 8 16 | 10 05 | 12 09 | 2 19 | 4 27 |
| 11 | 26 | சனி | 4 27 | 6 27 | 8 26 | 10 30 | 12 40 | 2 51 | 4 45 | 6 29 | 8 12 | 10 01 | 12 05 | 2 15 | 4 23 |
| 12 | 27 | ஞாயி | 4 23 | 6 23 | 8 22 | 10 26 | 12 36 | 2 47 | 4 41 | 6 25 | 8 08 | 9 57 | 12 01 | 2 11 | 4 19 |
| 13 | 28 | திங் | 4 19 | 6 19 | 8 18 | 10 22 | 12 32 | 2 43 | 4 37 | 6 21 | 8 04 | 9 53 | 11 57 | 2 07 | 4 15 |
| 14 | 29 | செவ் | 4 15 | 6 15 | 8 14 | 10 18 | 12 28 | 2 39 | 4 33 | 6 17 | 8 00 | 9 49 | 11 53 | 2 03 | 4 11 |
| 15 | 30 | ன்தபு | 4 11 | 6 10 | 8 09 | 10 13 | 12 23 | 2 34 | 4 28 | 6 12 | 7 55 | 9 44 | 11 48 | 1 58 | 4 06 |
| 16 | 31 | வியா | 4 06 | 6 06 | **8 05** | 10 **09** | 12 19 | 2 30 | 4 24 | 6 08 | 7 51 | 9 40 | 11 44 | 1 54 | 4 02 |

* இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: ஆவ 31உ (16-9-82) பகல் 9 மணிக்கு என்னலக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை அவதானிக்கவும். (8-05—10-09) துலா லக்னம்

# ஆவணி மாதக் கிரகநிலை

| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
|---|---|---|---|
| | | | ராகு |
| கும்பம் | ஆவணி மாதக் கிரக நிலை | | கடகம் சுக் |
| மகரம் | | | சிம்மம் சூரி, புத |
| கேது நெப்டி | யூரே | குரு, குஜ | சனி |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

## கிரகமாற்றங்கள்

7உ (23-8-82) பகல் 2-56க்கு கன்-புத
17உ (2-9-82) இரவு 10-49க்கு சிங்-சுக்
25உ (10-9-82) மாலை 7-04க்கு விரு-குஜ
22உ நெப்டியூன், வக்ரத்தியாகம்.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆவணி 2உ | (18-8-82) | பி.இ. | 4-39 | முதல் | சிங்கம் |
| 5உ | (21-8-82) | காலை | 6-50 | ,, | கன்னி |
| 7உ | (23-8-82) | பகல் | 12-01 | ,, | துலாம் |
| 9உ | (25-8-82) | இரவு | 9-04 | ,, | விருச்சிகம் |
| 12உ | (28-8-82) | காலை | 9-12 | ,, | தனுசு |
| 14உ | (30-8-82) | இரவு | 10-04 | ,, | மகரம் |
| 17உ | (2-9-82) | காலை | 9-22 | ,, | கும்பம் |
| 19உ | (4-9-82) | மாலை | 6-07 | ,, | மீனம் |
| 21உ | (6-9-82) | இரவு | 12-35 | ,, | மேடம் |
| 23உ | (8-9-82) | பி.இ. | 5-23 | ,, | இடபம் |
| 26உ | (11-9-82) | காலை | 8-57 | ,, | மிதுனம் |
| 28உ | (13-9-82) | பகல் | 11-34 | ,, | கடகம் |
| 30உ | (15-9-82) | ,, | 1-44 | ,, | சிங்கம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி ஆவணி 31 உ பகல் 9-00 மணிக்கு துலா லக்னம் என அறிந்து கொண்ட பின் துலாம் என்ற கூட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

இம்மாதம் நாட்டில் பொருளாதார விருத்தியும், சுபீட்சமும் சிறப்புறும்' தேசிய நலமும் நல்லெண்ணமும் விருத்தியாகும். கல்வித்துறையில் ஊக்கமும், முன்னேற்றமும் காணும். பிரயாணத்துறை முன்னேற்றமடையும். விவசாயத்திற்கு அனுகூலமாக மழைவீழ்ச்சியும், சுவாத்தியமும், இடம்பெறும். பாதுகாப்புத்துறைகளில் மாற்றங்கள் ஏற்படும்.

# நலந்தரும் கால ஹோரைகள்

சூரிய ஹோரை:- உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

சந்திர ஹோரை:- ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

செவ்வாய் ஹோரை:- உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

புதன் ஹோரை:- வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

குரு ஹோரை:- எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

சுக்கிர ஹோரை:- சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

சனி ஹோரை:- இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (ஆவணி மாதம் 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6மணி 01 நிமிஷம்)

| வாரம் | 6...05<br>7...05 | 7...05<br>8...05 | 8...05<br>9...05 | 9...05<br>10...05 | 10...05<br>11...05 | 11...05<br>12...05 | 12...05<br>1...05 | 1...05<br>2 05 | 2...05<br>3...05 | 3...05<br>4...05 | 4.. 05<br>5...05 | 5 .. 05<br>6...05 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

குறிப்பு:- நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

# ஆவணி மாத வானியற் காட்சிகள்

# ASTRONOMICAL PHENOMENA

## 17-8-82 — 16-9-82

சூரியன் :— 17-8-82 இரவு மணி 1-28-ல் நிரயன சிம்மராசிப் பிரவேசம்.

| | | | |
|---|---|---|---|
| 17-8-82 | உதயம் | காலை | 6-05 |
| | அஸ்தமனம் | மாலை | 6-24 |
| 16-9-82 | உதயம் | காலை | 6-03 |
| | அஸ்தமனம் | மாலை | 6-07 |

சுக்கிரன் :—

| | | | |
|---|---|---|---|
| 19-8-82 | அமாவாசை | காலை | 8-16 |
| 20-8-82 | சந்திரதர்சனம் | | |
| 27-8-82 | பூர்வ அஷ்டமி | இரவு | 4-23 |
| 3-9-82 | பூரணை | மாலை | 5-59 |
| 11-9-82 | அபர அஷ்டமி | காலை | 9-49 |

### கிரகங்கள்:

புதன் :— மாதத்தொடக்கத்தில் அஸ்தமனத்தின் பின் மேற்கு அடிவானத்தில் 20 பாகை உயரத்தில் தோற்றும் இக்கிரகம் 6–9–82-ல் சூரியனிலிருந்து பிரியும் அதிதூரமாகிய (Greatest Elongation) 27 பாகை உயரத்தில் தோற்றி மாத முடிவில் 24 பாகை உயரத்தில் காணப்படும். 23-8-82-ல் கன்னிராசியிற் பிரவேசிக்கிறது.

சுக்கிரன் :— மாத ஆரம்பத்தில் உதயம் முன் கீழ் வானத்தில் விடி வெள்ளியாகத் தோற்றும் இக் கிரகம் மாதமுடிவில் 13 பாகை உயரத்தில் காணப்படும். சூரியனைச் சமீபத்தலினு ல் இதன் பிரபை குறைந்து வருதலைக்காணலாம். 2-9-82-ல் சிங்கராசியிற் பிரவேசிக்கிறது.

செவ்வாய் :— மாத ஆரம்பத்தில் சூரிய அஸ்த மனத்தின் மேல் உச்சிக்கு 15 பாகை மேற்கே (வியாழனுக்கு 18 பாகை கிழக்கே) காணப்பட்ட இக்கிரகம் மாதமுடிவில் உச்சிக்கு 26 பாகை மேற்கே (வியாழனுக்கு 18 பாகை கிழக்கே) காணப்படும். 10-9-82-ல் விருச்சிகராசியிற் பிரவேசிக்கும்.

வியாழன் :— மாத ஆரம்பத்தில் சூர்யாஸ்தமனத் தின்மேல் மேற்குவானில் 70 பாகை உயரத்தில் தோற்றும் இக்கிரகம் மாதமுடிவில் 46 பாகை உயரத்தில் காணப்படும். 5-9-82-ல் சுவாதி 2-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

சனி :— மாத ஆரம்பத்தில் வியாழனுக்கு 16 பாகை மேற்கில் காணப்படும் இக்கிரகம் மாத முடிவில் 17½ பாகை தூரத்தில் காணப்படும். 7-9-82-ல் சித்திரை 2-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

இந்திரன் :— (Uranus) இம்மாதமும் விருச்சிக ராசியில் அனுஷம் 2-ம் பாதத்தில் சஞ்சரிக்கிறது.

வருணன் :— (Neptune) தனுராசியில் மூலம் 1-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது. வருடாரம்பத்திலிருந்து வக்கிரகதியிற் சஞ்சரித்த இக்கிரகம் 7-9-82-ல் இருந்து நேர் கதியிற் செல்லும்.

குபேரன் :— (Pluto) துலாராசியிற் சித்திரை 3-ம் பாதத்தில் சஞ்சரிக்கிறது.

### சமாகமங்கள்

17-8-82 முன்னிரவு சந்திரனுக்கு தெற்கு சுக்கிரன் 1½ பாகை. விடியற்காலை சந்திரோதயத்தின்பின் அவதானிக்கவும்.

20-8-82 நள்ளிரவு சந்திரனுக்குத் தெற்கு புதன் 5 பாகை. சந்திரதர்சனத்துடன் அவதானிக்கவும்.


22-8-82 பின்னிரவு சந்திரனுக்கு சனி பாகை 3. முன்னிரவில் சந்திர அஸ்தமனத்துக்கு முன் கவனிக்கவும்.

24-8-82 முற்பகல் சந்திரனுக்குத் தெற்கு வியாழன் 4 பாகை. சூர்யாஸ்தமனத்தின் பின் கவனிக்கவும்.

24-8-82 நள்ளிரவு சந்திரனுக்குத் தெற்கு செவ்வாய் 6 பாகை முன்னிரவு சந்திராஸ்தமன சமயம் கவனிக்கவும்.

7-9-82 பிற்பகல் சந்திரனுக்கு வடக்கு மக நக்ஷத்திரம் 1 பாகை. அன்று உதயத்தின்முன் அவதானிக்கவும்.

16-9-82 மாலை சந்திரனுக்கு தெற்கு சுக்கிரன் 3 பாகை. மறுநாள் உதயம்முன் அவதானிக்கவும்.



# இம்மாதம் உங்களுக்கு எப்படி

**டாக்டர் பண்டிற் கே. என். நவரத்தினம் A. F. A.**

**17-8-82 முதல் 16-9-82 வரை**

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக் குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத் தட்ட ஒருவரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

மேடராசியினர்க்கு சூரியன் தாம்ரமூர்த்தியாக 5ல் சஞ்சரிப்பதால் நற்பலன்கள் ஏற்பட வழியிருக்காது. 4-ம் இடத்தில் சுக்கிரன் மாத முற்பகுதியில் குடும்ப அமைதியைக் கொடுத்துதவுவார். 6ல் சனி தனித்திருப்பதால் சிறு நன்மைகள் உண்டாகும். ஆரோக்கியக்குறைவு சிறிது நலமடையும். எண்ணிய கருமங்கள் தடையேற்பட்டாலும் ஓரளவுக்குக் கைகூடும். சுற்றுடலில் அமைதி, அந்தஸ்து, கௌரவம் என்பன உங்கள் முயற்சியால் பாதுகாக்கப்படும். பணவருவாய் செவ்வாய் வியாழன் சேர்க்கையால் பாதிப்படையும். பெற்றோர்வழி கவலைக்குக் குறைவிருக்காது.

குடும்பஸ்தர்களுக்கு குடும்பாதிபன் சுக்கிரன் கேந்திர, திரிகோண ராசிகளில் சஞ்சரிப்பது குடும்ப அமைதியையும், கலையார்வத்தையும் உண்டாக்க உதவியளிக்கும். புத்திர முன்னேற்றங்கள் திருப்தியளிக்காது. களத்திரவழி நன்மை கிட்டாது. ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும்.

வியாபாரிகளுக்கு முன்முதலீடுகள் விற்பனையாகும். வாகன வியாபாரம் செய்வோர் நன்மையடைவர். கடின முயற்சியால் பணக்கஷ்டத்தைச் சமாளிக்கலாம், பங்கு வியாபாரம் செய்வோரை மிக்க அவதானமாக இருக்குமாறு செவ்வாய் எச்சரிக்கிறார்.

உத்தியோகத்தர்களுக்கு அரசியல் கிரகம் சூரியன் ஆட்சி பெற்று திரிகோண ராசியில் சஞ்சரிப்பதால் எவ்வித பிரச்சினைகளும் உங்களை

அணுகாது. கடமையே கருத்தாக கடமை புரி வீர்கள். எண்ணிய கருமங்கள் தாமதப்பட்டே கைகூடும்.

விவசாயிகட்கு 6ல் விவசாயி சனி சஞ்சரிப்ப தால் எல்லாவிதத்திலும் நன்மையுண்டாகும். அரசாங்க உதவிகள் கிட்டும். அயல் காணித்தக ராறுகளைச் சமாளித்துக் கொள்ளலாம். வயற் காணிகள் கொள்வனவு செய்ய வசதிகிட்டும்.

தொழிலாளிகட்கு மிகவும் சிறப்பானமாதம். தனித்தொழில் விருத்தி பெறும். பங்குத்தொழில் செய்வோர் சற்றுப் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியேற்படும். தொழில் வாய்ப்புகள் திருப் திகரமாக இருக்கும்.

மாணவர்கட்கு புதன், சுக்கிர சஞ்சாரங்கள் நன்மை பயப்பனவாக அமைவதால் கல்வி வளர்ச் சிக்கு உதவி செய்யக்கூடும். மனக்குளப்பத்தை செவ்வாய் 7-ம் வீட்டிலிருந்து பார்ப்பதால் எதிர் நோக்கவேண்டி நேரிடும். தூரதேசக் கல்வியால் சிறு தடங்கல்கள் ஏற்படலாம்.

பெண்களுக்கு மிகவும் ஆடம்பரம் நிறைந்த மாதம். செவ்வாய் களத்திர ஸ்தானத்தில் குடும்ப ஒற்றுமையை சீர்குலைக்க எத்தனிப்பர். விவாகப் பேச்சுக்கள் தடைப்படலாம். காதலில் ஈடுபட் டோர் இன்பக் கடலில் மிதப்பார்கள்.

அதிஷ்ட நாட்கள்;- ஆக21,23மு,ப'செப்2,3,4முப.

துரதிஷ்ட நாட்கள்:- ஆக25பி.ப.26,27,செப்4பிப. 5,6.



## இடபம்

கார்த்திகை 2,3,4,ரோகிணி, மிருகசிரிடம்1,2ம் கால்

இவ்விராசியினருக்கு சூரியன் இரஜதமூர்த் தியாக 4-ம் இராசியில் பவனி வந்துகொண்டிருப்ப தால் கஷ்ட,நஷ்டங்கள் ஏற்பட வழியிருக்காது. 5-ல் சனி, 6-ல் செவ்வாய், வியாழன் சேர்க்கை நன்மை பயக்கா விடினும் ஆட்சிபெற்ற சூரியன் எல்லாக் கைங்கரியங்களையும் வெற்றிகொள்வார். தேகசுகம் பாதிப்படையாமல் காக்கப்படும். பணத் தட்டுப்பாடு அதிகரிக்காது. அயலவர் பிரச்சனை கள் சமாதானத்துக்கு வரும். புத்திரத் தொல்லை கள் சமாளித்துக் கொள்ளலாம். சுற்றுடல் அமை திக்கு இருப்பிடமாக அமையும், வாக்கு, கௌர வம் என்பன சிறப்புற அமையும்.

குடும்பஸ்தர்க்கு பொருள் பண்டங்கள் சேரும், கடன் வசதிகள் கிடைக்கும். மனைவி, மக்கள் உறவு திருப்தியளிக்காது. அயலவர், உறவி னர் உதவிகள் கிட்டும். தொல்லைகள் வெளியார் தலையீட்டால் நிவிர்த்தியடையும்.

வியாபாரிகட்கு வியாபாரி புதன் வியாபார வளர்ச்சியை ஊக்குவிப்பார். முதலீடுகள் மேற் கொள்ளச் சிறப்பான மாதம். வங்கி நிலைபரம் நன்மை பயக்கும். கள்ளச்சந்தை வியாபாரம் தடைப்படும். போக்கு வரத்து வியாபாரிகள் கொள்ளை லாபமடைவர்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் ஆட்சிப்பெ ற்று மூர்த்தி பலமடைந்திருப்பதால் கஷ்டங்கள் ஏற்பட வழியிருக்காது. உயர்ச்சிகளும், பணவரு வாயும் பெருகும் மாதம். சகஉத்தியோகத்தர்கள் ஒத்துழைப்பு நல்காவிடினும் அடங்கி நடப்பர்.

விவசாயிகளுக்கு சனி 5-ம் இடத்தில் தடை தாமதங்களை உண்டு பண்ணினாலும் கவலைப்பட ஒன்றுமில்லை. புதுப்பயிர் நாட்டுதல் தடைப்படும். தானியக்கொள்வனவு, அரசாங்க உதவி என்பன கிடைக்கப்பெறும். சூரியபகவானின் உதவியுடன் சகல கருமங்களையும் மேற்கொள்ளலாம்.

தொழிலாளர்களுக்கு தொழில்வாய்ப்புகள் வந்துசேரும். சொந்தமுயற்சியில் இறங்க சிறந்த காலம். பங்காளிகள் கருத்துமோதல் ஏற்பட்டு கவலையடைவார்கள். கூட்டுறவுத்துறை ஊழியர் அதிகம் துன்பப்படமாட்டார்கள்.

மாணவர்கட்கு கல்வித்துறையில் வளர்ச்சி அபாரமாகும். பரீட்சையில் சித்தியடைவது திண் ணம். நேர்முகப்பரீட்சையில் வெற்றி, மாதபிற் பகுதியில் கலை விளையாட்டுத் துறைகளில் புகழ் சம்பாதிக்கலாம். கல்வி முன்னேற்ற அறிகுறிகள் தென்படும்.

பெண்கட்கு கணவனைக் குறிக்கும் சூரியன் ஆட்சியாக இருப்பதால் முன்னேற்றத்தைக் கொ டுக்கும். தொழில் வளர்ச்சி, அந்தஸ்து உயர்வு ஆகியன கிடைக்கும். காதல் விவகாரங்கள் தலை தூக்காது. விவாகப்பேச்சுக்கள் கைகூட வழியில்லை.

அதிஷ்ட நாட்கள்: ஆக 23 பி:ப 24, 25 மு.ப செப். 4பி.ப 5, 6.

துரதிஷ்ட நாட்கள்: ஆக 28, 29, 30 மு. ப. செப். 7, 8.



## மிதுனம்

மிருகசீரிடம்3,4,திருவாதிரை, புனர்பூசம் 1,2,3-ம்கால்

இந்த ராசியில் ஜனித்தவர்களுக்கு 3-ம் இடத்தில் சூரியன் சுவர்ண மூர்த்தியாக ஸ்தான பெலத்துடன் ராஜபவனி வருவதால் தொடர்ந்து நற்பலன்களை அனுபவிக்க வாய்ப்புண்டாகும். லக்கினாதிபதி புதன், ஒன்பதாதிபதி சனியுடன் கூடி 4-ம் இடத்தில் ராஜயோகம் பெற்றிருப்பதால் எதுவித குறைவுமிருக்காது. பிரயாணங்கள் பண வருவாயைக் கூட்டும். புத்திரலாபம் கிடைக்கும். சூழ்நிலையில் சந்தோஷம் நிலவும். இனபந்துக்கள் சேர்க்கையேற்பட்டு இலாபங்களைக் கொடுக்கும். சமூகத்தில் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும், பணக்கஷ்டங்கள் அடியோடு மறைந்துவிடும்.

குடும்பஸ்தர்கட்கு புத்திரகாரகன் வியாழன் சகலவித நன்மைகளையும் செய்வார். மனக் கஷ்டம், பணக் கஷ்டம் எல்லாம் தீர்ந்து போகும். நற்காரியங்கள் நடைபெற உகந்த காலமாகும். மனைவி மக்களின் ஒத்துழைப்புடன் கருமங்களை மேற்கொள்ளலாம்.

வியாபாரிகட்கு செட்டி புதன், ரவிபுத ராஜயோகம் பெற்றிருப்பதால் வியாபார விருத்திக்கு ஒரு வரப்பிரசாதமாகும். வங்கிக் கணக்கு திருப்தியாக இயங்கும். அழகுசாதனப் பொருட்கள் அதிகமாக விற்பனையாகும். கள்ளச்சந்தை வியாபாரம் லாபம் தரும்.

உத்தியோகத்தர்களுக்கு ஆட்சிபெற்று ஸ்தான பெலத்துடன் சஞ்சரிக்கும் சூரியபகவான் எல்லாக் கருமங்களிலும் உங்கட்குச் சாதகமாக இயங்குவார். நன்மாற்றங்கள் விரும்பினால் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக உழைப்பும், பதவி யுயர்வும் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு விவசாயி சனி 4-ம் இடத்தில் இருந்தாலும் கவலையில்லை. பல பிரச்சினைகளுக்கிடையிலும் பயிர்ச்செய்கையில் லாபமேற்படலாகும். புதுப்பயிர்கள் நாட்டி நன்மையடையலாம். உங்களுக்கெதிரான குற்றச்சாட்டுகள் நீங்கிவிடும்.

தொழிலாளர்களுக்கு தொழில் வசதிகள், அந்தஸ்து உயர்வு என்பன கிடைக்கப்பெறும். புதுத் தொழில்களும் கிடைக்கலாகும். கூட்டுறவாளர் சமாளித்துப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம். கடின உழைப்பும் பொருள் லாபமும் உண்டாகும்.

மாணவர்களுக்கு கல்விவளர்ச்சியில் தடங்கல் ஏற்படாது. வித்தியாகாரகன் புதன் ஞாபக சக்தியைக் கூட்டி கல்வியில் ஊக்கத்தைக் கொடுப்பான். கலைத்துறையில் ஓரளவு புகழ் கிடைக்கும். கல்வி முன்னேற்றம் அதிகமாகும்.

பெண்களுக்கு கணவன் சூரியன் 3-ம் இடத்தில் ஸ்தானபெலத்துடன் இருப்பது கணவனின் அந்தஸ்து உயர்ச்சிக்கும். தொழில்வாய்ப்புக்கும் நன்றாகும். கன்னிப்பென்கள் களிப்பாகக் காலத்தைக் கடத்துவர். விவாகப்பேச்சுகள் வெற்றியளிக்கும்.

அதிஷ்ட நாட்கள்: ஆக 25 பி.ப. 26, 27, செப்.7,8.

துரதிஷ்ட நாட்கள்: ஆக 30 பி.ப.31, செப் 1, 9, 10, 11 மு.ப.



## கடகம்

புனர்பூசம் 4-ம்கால், பூசம், ஆயிலியம்

இவ்விராசியிற் பிறந்தவர்கட்கு சூரியபகவான் லோகமூர்த்தியாக 2-ம் இடத்தில் வலம் வருகின்றார். எனவே தொடர்ந்து பணச்சிக்கல்கள், மனச்சிக்கல்கள் உங்களைத் தொந்தரவு செய்யும். சகோதரர்களுடனும், அயலவர்களுடனும் பகைமைகள் ஏற்படும். மனதில் புரட்சி மனப்பான்மை ஏற்பட்டு கருமங்களை மேற்கொள்வீர்கள். தொடர்ந்து தேகாரோக்கியம் சீர்குலையும். 2-ம் இடத்தில் சூரியன் ஆட்சிபெற்றிருப்பதால் வருவாய் சமாளிக்கக்கூடியதாக இருக்கும். வீடு வாசல்களில் சீர் திருத்தங்கள் ஏற்படும்.

குடும்பஸ்தர்களுக்கு 2-ம் அதிபதி சூரியன் ஆட்சியாக இருப்பதால் இல்வாழ்க்கையில் பிரச்சினைகளைச் சமாளித்துக் கொள்ளலாம்; புத்திர

லாபங்கள் கிட்டாது. உடைமைகள் மூலம்பணச் செலவுகள் அதிகரிக்கும்.

வியாபாரிகட்கு செட்டி புதன் மாத முற் பகுதியில் நன்ருக வியாபார வளர்ச்சிக்கு உதவி செய்வான். மாதபிற்பகுதியில் அழகு சாதனம், மின்சாரம் சம்பந்தப்பட்டவைகளில் முதலீடுசெய் வதால் நன்மை கிட்டும். கூட்டுறவுத்துறை, பங்கு வியாபாரம் போன்றவை சிறப்படைய வழியில்லை.

உத்தியோகத்தர்கட்கு அரசியலைக் குறிக்கும் சூரியபகவான் மூர்த்திபலமின்மையால் அதிக நன் மைகள் செய்யமாட்டார். சகாக்களும், கீழ் உத் தியோகத்தரும் உங்களை மதிக்கமாட்டார்கள். அமைதியற்ற பிரதேசங்களில் கடமையாற்ற நேரிடலாம்.

விவசாயிகளுக்கு விவசாயி சனி 3-ம் இடத் தில் கடின உழைப்பைக் கொடுத்தாலும், ஊதி யத்தைத் திருப்தியாக வழங்குவார். வயல் தோட் டம் சம்பந்தமான தகராறுகள் தோன்றி மறை யும்.

தொழிலாளர்கட்கு உழைப்புக்கேற்த ஊதி யம் கிட்டும். தொழிற்சாலையில் அமைதிக்குப் பங்கமேற்படுவதால் தொழில் வாய்ப்புகளை தேடி அலைய நேரிடும். கூட்டுறவாளர் நிலைமையைச் சமாளித்துக் கொள்வர். பணக்கஷ்டம் இருப்பி னும் அதிகம் பாதிக்காது.

மாணவர்கட்கு உள்நாட்டுக்கல்வியில் குழப்ப நிலை ஏற்படும். பரீட்சைகள் சாதகமாக அமை யாது. நேர்முகப் பரீட்சைகளில் திருப்தியிராது. மந்தநிலை நீடிப்பதால் சற்று அவதானமுடன் நடக்கவும். விளையாட்டு கல்வித்துறைகளில் ஈடு பாட்டைக் குறைக்கவும்.

பெண்களுக்கு குடும்பப்பெண்கள் கணவனின் கட்டுப்பாட்டுக்குள் இயங்க நேரிடலாம். விவா கப் பேச்சுக்கள் இறுதிநேரத்தில் குழப்பமேற்படக் கூடும். கன்னிப்பெண்கள் தமது நாடகத்தைத் தொடர்ந்து நடத்துவர்.

அதிஷ்ட நாடகள்:- ஆக28,29,30மு.ப. செப்9,10,11மு.ப.

துரதிஷ்ட நாட்கள்: செப். 2,3,4மு.ப.11 பி.ப. 12,13,மு.ப.



# சிங்கம்

மகம், பூரம், உத்தரம், 1-ம் கால்

சிங்கராசிக்கரருக்கு சூரியன் சுவர்ணமூர்த் தியாக ஜன்மராசியில் ராஜபவனி வருவதால் எதுவித கலக்கமும் ஏற்படாது. ஏழரைச்சனியின் கடைக்கூருக விருந்தாலும் கஷ்டங்களைச் சமா ளித்துக் கொள்ளலாம். அயலவர், சகோதரங்க ளுடன் மனக்கசப்புகள் தோன்றிருலும் ஈற்றில் வெற்றி உங்கள் பக்கம் இருக்கும். கடந்த மாதத்தைவிட பொருளாதாரத் துறையில் முன் னேற்றம் அதிகரிக்கும். தேகாரோக்கியம் சீரடை யும். சிறுபயணங்களால் லாபங்களுண்டாகும். அலைச்சலுக்கேற்ப நற்பயன் கிடைக்கும்.

குடும்பஸ்தர்களுக்கு புத்திரலாபம் குறைவு படினும் கவலைப்படும்படியாக ஒன்றுமில்லை. இன சன பந்துக்களின் உதவிகள் கிடைக்கும். கடன் தொல்லைகள் குறைவடையும். வருவாய் அதி கரிக்கும்.

வியாபாரிகளுக்கு வியாபாரி புதன் 1-ம் 2-ம் ராசியில் சஞ்சரிப்பது வியாபார முன்னேற் றத்துக்கு அறிகுறியாகும். வங்கிநிலைபரம் நன் ருக இருக்கும். கள்ளச்சந்தை வியாபாரம் லாபம் தரும். பங்குவியாபாரிகளும் நன்மையடைவார்கள்.

உத்தியோகத்தர்களுக்கு சூரியன் ஆட்சிப் பெற்று மூர்த்திபெலத்துடன் இருப்பதால் எல்லா விதத்திலும் நன்மையுண்டாகும். மேலதிகாரி களை உங்கள் வசமாக்கிக் கொள்ளலாம். அந்தஸ்து உயரும்; எண்ணியகரும் இனிதே நிறைவுறும்.

விவசாயிகளுக்கு சனி 2ல் இருப்பதை யிட்டு கவலையடையத் தேவையில்லை. பயிர்ச்செய் கையில் தடங்கல் ஏற்படினும் முன்னேற்றம் கிட் டும். அயல்காணிச் சண்டைகளில் இலகுவாக வெற்றிகொள்ளலாம்.

தொழிலாளர்களுக்கு நல்லமாதம். தொழில் வாய்ப்புகள் சீராகவந்து சேரும். சொந் தத் தொழில் வளர்ச்சியடையும். பங்குத்தொழில் சுமாரான லாபத்தைக் கொடுக்கும். கூட்டுறவுத் துறை சமாதானமாக இயங்கும்.

மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சிக்கு பிரமாதமான மாதமாகும். ஞாபகசக்தி அபாரமாக வேலை செய்யும். பரீட்சையில் சித்தி, வெற்றி, பாராட்டு என்பன கிடைக்கும். நேர்முகப்பரீட்சைகளும் நன்மையளிக்கும்.

பெண்களுக்கு காதலன் சுக்கிரன் மாத நடுப்பகுதியில் சிங்கராசியில் வேண்டியளவு உதவி செய்வான். தடைப்பட்ட நற்காரியங்களில் திருப்பம் ஏற்படும். கணவன் மனைவி உறவு குதூகலிக்கும். உங்கள் செல்வாக்கு உயரும்.

அதிஷ்ட நாட்கள்: ஆக 30 பி.ப. 31,செப், 1, 11 பி.ப. 12,13மு,ப.

துரதிஷ்ட நாட்கள்: ஆக 17,18,செப்.4பி.ப.5,6 13,பி.ப.14,15,மு.ப.




உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1, 2-ம் கால்

இவர்களுக்கு சூரியபகவான் தாம்ர மூர்த்தியாக 12-ம் இடத்தில் வலம்வருவதால் தொடர்ந்து கஷ்டங்களேற்படும். ஜன்ம ராசியில் சனீஸ்வரன் தொட்ட கருமங்களில் தடை தாமதங்களைக் கொடுப்பார். தனகாரகன் வியாழன் 2-ம் இடத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு நன்றாயினும் செவ்வாயுடன் கூடியிருப்பதால் திடீர் செலவுகள் உண்டாகும். 11-ல் சுக்கிரன் சினேகித நன்மைகளைக் கொடுக்கும். மாதா பிதா வழியால் துக்கம் ஏற்படலாகும். ஆரோக்கியம் சிறக்காது.

குடும்பஸ்தர்களுக்கு குடும்பாதிபன் சுக்கிரன் 11இலும் குடும்பஸ்தானத்தில் வியாழனும் ஓரளவு திருப்தியை வழங்குவர். கடின முயற்சிக்கேற்ற பலன் கிட்டும். புத்திர லாபம் குறைவாகவே இருக்கும். பணக்கஷ்டம் சமாளித்துக் கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு வியாபாரம் மாத பிற்பகுதியில் விசேடமாக நடைபெறும். 2-ல் செவ்வாய் உள்ள காலத்தில் அவசர முதலீடுகள் விரும்பத்தக்கதல்ல. வங்கி நிலுபரம் திருப்தியாக இருக்கும். நாவை சமயோசிதமாக உபயோகித்து வியாபாரத்தை நடத்தவும்.

உத்தியோகத்தர்களுக்கு எவ்வித நன்மையுமில்லை. வாக்கு, கலகங்கள் ஏற்பட்டுத் தொழிலும் அந்தஸ்தும் பாதிக்கப்படும். கடின உழைப்பால் மனம் சோர்வடையும். கருமங்கள் எதுவும் சீராக இயங்காது.

விவசாயிகட்கு சனி ஜன்மராசியில் கடின உழைப்பைக் கொடுத்து ஊதியத்தை அதிகரிக்க வழிவகுப்பார். இயற்கைக் கோளாறுகளுக்கு செவ்வாய் காரணகர்த்தாவாக இருப்பதால் பயிர் நட்டங்களுக்கும் குறைவிருக்காது.

தொழிலாளர்களுக்கு கடின உழைப்புக்கேற்ற லாபம் கிடைப்பினும் திடீர் செலவுகளுக்கும் குறைவிருக்காது. பங்குத்தொழில் லாபகரமாக அமையாது. கூட்டுறவுத்துறை வளர்ச்சி தடைப்படும். வாக்குவாதங்களால் தொழில் இழப்பு ஏற்படும்.

மாணவர்களுக்கு மாதமுற்பகுதி கல்விக்கு நன்றாயிருக்காது. மாதபிற்பகுதியில் புதன் கன்னி ராசியில் ஆட்சிபெற்றிருப்பது முன்னேற்றங்களைக் காட்டுகிறது. கலை விளையாட்டுத்துறை சுமாரான பலனையே தரும்.

பெண்களுக்கு சொந்த முயற்சியால் கருமங்களைச் சாதிக்கலாம். காதல் விவாக விஷயங்கள் தடைகளுடன் நிறைவேறலாம். கலையார்வத்தால் குடும்ப நிம்மதி சீர்குலையும். கணவனின் நடவடிக்கைகள் கேள்விக்குறியாக்வே அமையும்.

அதிஷ்ட நாட்கள்: ஆக 17, 18, செப் 2, 3, 4 மு.ப, 13பி.ப 14, 15 மு.ப

துரதிஷ்ட நாட்கள்: ஆக 19, 20, செப் 7,8,15 பி.ப 16.




சித்திரை, 3,4 சுவாதி, விசாகம் 1,2,3.

இந்தஇராசியில் பிறந்தோர்க்கு சூரியபகவான் இரஜதமூர்த்தியாக 11-ம் இராசியில் பவனி வந்து கொண்டிருப்பதால் நன்மைகளை எதிர்பார்க்கலாம். ஜன்மராசியில் செவ்வாயும் 12-ல் சனீஸ்வரனும் எதிலும் மனக்கலக்கத்தையும் சுகக்குறைவையும் தரமுயன்றாலும் நிலைமையைச் சமா

ளித்துக் கொள்ளலாம். உங்கள் செல்வாக்கு அரசியல் மட்டத்தில் உயர்வடையும். தூரதேச நன்மைகள் ஏற்பட வழியுண்டாகும். உறவினர், நண்பர்கள் சேர்க்கையால் லாபங்களுண்டானாலும் மனக்கவலையேற்பட தவறாது. பிரயாணச் செலவுகள் அதிகரிக்கும்.

குடும்பஸ்தர்களுக்கு 2-ல் யுரேனஸ், ஜன்ம ராசியில் செவ்வாய் புத்திரகாரகனுடன் கூடியிருப்பது குடும்பவளர்ச்சிக்கு நன்றல்ல. கலகங்களையும் பணச்செலவையும் உண்டாக்கும் மாதமாகும். புத்திரர் சம்பந்தப்பட்ட செலவுகளுக்கும் இடமுண்டு.

வியாபாரிகளுக்கு நன்மையான மாதம். வியாபாரத்தில் லாபம் உண்டாகும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் சுமாரான லாபத்தையே தரும். பங்குவியாபாரம் பிரச்சனைகளை ஏற்படுத்தாது. வங்கியாளன் திக்குப்பலம் பெற்றிருந்தால் வங்கி உதவிகள் கிட்டும்.

உத்தியோகத்தர்கட்கு மிகவும் சிறப்பான மாதம். அரசியல் செல்வாக்குகள் அதிகரிக்கும். பதவியுயர்வு சம்பளயுயர்வு என்பவற்றை எதிர்பார்ப்போர் நன்மையடைவர். புதுவிதமான வழியில் சினேகித நன்மைகள் உண்டாகும்.

விவசாயிகளுக்கு சனீஸ்வரன் 12-ல் விவசாய விருத்திக்கு நன்மையளிக்காவிடினும் கவலைப்படும்படியாக எதுவும் நிகழாது. தகராறுகள் சமாளிக்கப்பட்டுவிடும். அரசாங்க நட்டஈடுகளுக்கு முயற்சிப்போர்க்கு நன்மைகிட்டும்.

தொழிலாளிகளுக்கு சொந்தத் தொழில் விருத்தியடையும். தொழில் வாய்ப்புகளை 12-ல் சனி தடைபண்ணினாலும் கருமங்களை சாதித்துக் கொள்ளலாம். கூட்டுறவுத்துறையில் முன்னேற்றம் குறைவுபடாது. கலகங்கள் ஏற்படினும் ஈற்றில் நன்முடிவைத் தரும்.

மாணவர்களுக்கு கவலைப்பட எதுவுமில்லை. கல்வியில் ஊக்கம் உண்டாகும். பரீட்சையில் சித்தி கிட்டும். தொழில்வாய்ப்புகளை எதிர்நோக்குவோருக்கு நல்ல காலமாகும். உடல் பாதிப்படையும். வெளிநாட்டுக் கல்வி சிறப்படையும்.

அதிஷ்ட நாட்கள்: ஆக 19, 20, செப் 4 பி.ப 5, 6, 15 பி.ப 16.

துரதிஷ்ட நாட்கள்: ஆக 21, 22, 23, மு.ப. செப். 9, 10, 11 மு.ப.



# விருச்சிகம்

**விசாகம் 4-ம் கால் அனுஷம் கேட்டை**

இவர்களுக்கு சூரியபகவான் ராஜதமூர்த்தியாக 10-ம் இடத்தில் திக்குப்பலம் பெற்றுப் பவனி வருவதால் தொடர்ந்தும் இம்மாதமும் நன்மையானதே. அந்தஸ்து, புகழ், கீர்த்தி என்பன உண்டாகும். இழந்த செல்வாக்கை மீண்டும் பெற வாய்ப்புகள் கிட்டும். பிரயாணங்களால் நன்மையேற்படும். திட்டமிட்ட கருமங்கள் நடைபெறும். கடன்தொல்லைகள் குறையும். ஆரோக்கியம் சிறப்படையும். கடன்படினும் பணவசதிகளுக்குக் குறைவிருக்காது. வாக்கு வன்மையால் எதையும் சாதிக்கலாம்.

குடும்பஸ்தர்களுக்கு 2-ல்கேது இருப்பதால் பணச்செலவு அதிகரிக்கும். காலத்தைக் கடன்பட்டே கழிக்கவேண்டும். இல்லறசுகம் குறைவாகவிருக்கும். புத்திரலாபம் கிட்டாது. தூரதேச செய்திகளால் சந்தோஷமுண்டாகும்.

வியாபாரிகளுக்கு வியாபாரம் அதிகரிப்பினும் செலவுகளாலும் பொறுப்புகளாலும் மனக்கவலை உண்டாகும். கடன்பாக்கிகள் வசூல் தாமதமடையும். முதலீடுகள் தேவையற்ற வழிகளில் செல்வதால் பணமுடை ஏற்படும்.

உத்தியோகத்தர்ளுக்கு 10-ல் ஆட்சிப்பெற்ற சூரியன் அந்தஸ்தை உயர்த்திவைப்பார். செல்வாக்கு அதிகரிப்பால் காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம். சகாக்கள், மேல் உத்தியோகத்தர் களைப்பற்றி கவலையிருக்காது.

விவசாயிகளுக்கு சனீஸ்வரன் 11-ல் பயிர்ச் செய்கையில் லாபத்தைக் கொடுக்கும். தானியக் கொள்வனவு, விற்பனவு சம்பந்தமான நடவடிக்கைகள் நன்மையாகும். காணித்தகராறுகள் வெற்றியளிக்கும்.


தொழிலாளர்களுக்கு வேலைப்பழு அதிகரிப்பினும் மனச்சந்தோஷமுண்டாகும். கூட்டுறவுத் துறையில் கடமை புரிவோர் நன்மைபெறுவர் தனித்தொழில் செய்வோர் அந்தஸ்து உயர்ச்சியடையும். தொழில் வாய்ப்புகள் தாராளமாகக் கிடைக்கும்.

மாணவர்களுக்கு கல்விக்குகந்தகாலமாகும். மாதநடுப்பகுதியில் கல்விசம்பந்தப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளச் சிறந்த காலமாகும். தூரதேசக்கல்வி கற்போர்க்கு சிறப்பான மாதமாகும். கலைநிகழ்ச்சிகளில் உங்கள் ஈடுபாடு அதிகரிக்கும்.

பெண்களுக்கு குடும்பச் செலவுகள் அதிகரிப்பினும் கணவனின் அனுசரணைக்குக் குறைவில்லை. காதல் விடயங்களில் வெற்றிகிட்டும். விவாகமாகாதவர்கள் கவலையடைத் தேவையில்லை. பெற்றோர் வழியால் நன்மைகளுண்டாகும்.

அதிஷ்ட நாட்கள்: ஆக 21, 22, 23, மு.ப. செப் 7, 8.

துரதிஷ்ட நாட்கள்: ஆக 23 பி.ப 24, 25 மு.ப செப் 11 பி.ப 12, 13 மு.ப.




மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

இவ்விராசியில் ஜனனமானவர்களுக்கு சூரியபகவான் தாம்ரமூர்த்தியாக 9-ம் ராசியில் சஞ்சரித்துக் கொண்டிருப்பதால் நன்மைகள் ஏற்பட வழியிருக்காது. 11-ல் வியாழன் சஞ்சரிப்பினும் செவ்வாயுடன் சஞ்சரிப்பதால் தனப்பிராப்தி ஏற்பட ஏதுவாக இல்லை. பிதுர்வழி லாபங்கள் சிறிதளவு உண்டாகும். 10ல்சனியால் தொழில் ரீதியில் அலைச்சலும் கஷ்டமும் ஏற்படலாகும். ஆரோக்கியம் பாதிப்படையாது. தலைக்கு மிஞ்சிய பொறுப்புகளால் கவலைகள் அதிகரிக்கும். வெளிநாட்டுத் தொடர்புகள் குன்றும். சினேகித உறவினர் சேர்க்கை கலக்கம் தரும்.

குடும்பஸ்தர்களுக்கு புத்திரகாரகன் அதிக லாபங்களைத்தர செவ்வாயின் உதவியை நாட வேண்டியேற்படும் பணக்கஷ்டங்கள்தீர சனி வழி வகுக்கமாட்டார். கருத்துமோதல் ஏற்படுவதால் இல்வாழ்க்கை கவலைக்குரியதாக அமையும். குடும்ப கௌரவம்,அந்தஸ்தை வைத்து கருமங்களை மேற்கொள்ள 9-ல் சூரியன் வழிவகுப்பார்.

வியாபாரிகளுக்கு வங்கிநிலை நன்றாகவிருப்பினும் வியாபார விருத்தியிருக்காது. முதலீடுகள் நன்மையளிக்கக் கூடியதாக இல்லை. கள்ளமார்க்கட் வியாபாரம் பெருநட்டம் தரும். அலைச்சலுடன் கூடிய கஷ்டங்களை மேற்கொள்வீர்கள்.

உத்தியோகத்தர்களுக்கு சூரியன் ஆட்சிப் பெற்றிருப்பதால் கந்தோரில் நிலைமையைச் சமாளிக்கலாம். பதவிமாற்றங்கள் ஏற்படினும் பாதிப்பு ஏற்படாது. சகாக்களுடன் கஷ்டங்களில் பங்கு கொள்ள சந்தர்ப்பமுண்டாகும்.

விவசாயிகளுக்கு விவ்சாயி சனி 10-ல் இருப்பது நன்றல்ல, சூரியன் மூர்த்திபலமற்றிருப்பதால் முயற்சிக்கேற்ப லாபம் கிட்டாது. உறவினர் உதவியுடன் கலகங்களைச் சமாளித்துக் கொள்ளலாம். தானியக் கொள்வனவுக்கு சிறப்பில்லை.

தொழிலாளருக்கு கஷ்டமான காலமாகும். கடுமையாக உழைத்தாலும் ஊதியம் பற்றுக்குறையாகவே இருக்கும். வியாழசுகம் இருப்பதால் சினேகித உதவியால் காரியங்களைச் சமாளித்துக் கொள்ளலாம். முதலாளிகள் உதவிமனப்பான்மையிருப்பினும் செயலாற்றல் இருக்காது.

மாணவர்களுக்கு வித்தியாகாரகன் புதன் 9-10-ம் இடங்களிருலிப்பினும் கடின முயற்சியின் பின்பே சித்தி கிட்டும். கலைத்துறை, விளையாட்டுத்துறை முதலியவற்றில் கடினமாக உழைத்தாலும் மதிப்புக் கிடைப்பது கஷ்டம்.

பெண்களுக்கு கணவனைக் குறிக்கும் சூரியன் 9-ல் இருப்பதால் கணவனின் ஆதரவு கிட்டும். இருப்பினும் பொறுப்புகள் அதிகரிப்பதால் வேதனையுண்டாகும். விவாகமுயற்சிகள் கைகூடமாட்டாது. கன்னிப் பெண்கள் காதலுக்காக அலைந்து திரிவர்.

அதிஷ்ட நாட்கள்: ஆக 23 பி.ப. 24, 25 மு.ப செப் 9, 10, 11 மு.ப.

துரதிஷ்ட நாட்கள்: ஆக 17, 18, 25, பி.ப.26, 27, செப் 13 பி.ப. 14, 15




உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2,

மகர ராசியினர்க்கு சூரிய பகவான் அட்டம ராசியில் சஞ்சரிப்பினும் சுவர்ணமூர்த்தியாகப்

பவனி வருவதால் கஷ்டங்களும் நன்மைகளும் கலந்து காணப்படும். 10-ம் இடத்தில் செவ்வாய் வியாழன் சேர்க்கை 9-ம் இடத்தில் சனி ஆகிய கிரகங்கள் நன்மை பயப்பனவாக இல்லை. வெளி நாட்டுத் தொடர்புகள் பாதிப்படையும். இன பந்துக்கள் சேர்க்கை நன்மை தராது. தொழில் வளர்ச்சி குன்றும். தேகசுகம் பாதிக்கப்படும். பிதுர்வழி நட்டங்கள் ஏற்படலாம். பிரயாணச் செலவுகள் அதிகரிக்கும். அரசாங்கத் தொல்லை கள் உண்டாகும்.

குடும்பஸ்தர்களுக்கு குடும்ப வருமானங்கள் பாதிப்படையும். கடன் தொல்லை அதிகரிப்பால் கருமங்களைச் சரிவர மேற்கொள்ள முடியாது. புத்திர லாபம் கிட்டாது. குடும்பச் செல்வாக்கு குறையும். அங்கத்தவர்களிடையே பிணக்கு அதி கரிக்கும்.

வியாபாரிகளுக்கு வியாபாரம் வளர்ச்சியடை யாது. முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். கள்ள மார்க்கட் வியாபாரம் அவலத்தில் முடிவுறும். பங்கு வியாபாரம் நன்மையளிக்கும். வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகளில் பிரச்சினைகளேற்படி னும் சமாளித்துக் கொள்ளலாம்.

உத்தியோகத்தர்களுக்கு சூரியன் அட்டமத் தில் சஞ்சரிப்பதால் சிறு தொல்லைகள் உருவாகி னாலும் சமாளித்துக் கொள்ளலாம். மாற்றங்கள் நடைபெற வாய்ப்புண்டு. அந்தஸ்து ரீதியாக எதுவித பாதிப்பும் ஏற்படாது.

விவசாயிகளுக்கு சனீஸ்வரன் 9-ல் பயிர்ச் செய்கைக்கு நன்மை பயக்கமாட்டார். செலவி னங்கள் அதிகமாகும். அரசியல் தொல்லைகள் அதிகரிக்கும். அயல்காணித் தொந்தரவுகள் ஏற் படும். பயிர் நாட்டலுக்கு உகந்த காலமல்ல.

தொழிலாளர்களுக்கு சிறப்பு இருக்காது. 10-ல் வியாழன் செய்தொழிலைக் காப்பாற்றுவார். தொழில் வாய்ப்புகள் கிடைக்க மாட்டாது. சொந்தத் தொழில் விருத்தி குன்றும். சேர்ந்த வர்களால் நன்மை ஏற்படுவது கடினம்.

மாணவர்கட்கு வித்தியாகாரகன் புதன் 8-ல் ஞாபகமறதி, சோம்பல் என்பவற்றைக் கொடுத்துக் கல்வியைக் கெடுப்பான். மாத பிற் பகுதியில் புதன் கன்னி ராசிக்குள் பிரவேசிப்ப தால் கல்வியில் உற்சாகம் அதிகரிக்கும்.

பெண்களுக்கு காதலன் சுக்கிரன் 7-ம், 8-ம் இராசிகளில் நன்றல்ல. பிதுர்வழி கஷ்டம் அதி ரிப்பதால் நற்கருமங்கள் கெட்டுப் போகும். தொழில் புரியும் பெண்களின் அந்தஸ்து உயரும்.

அதிஷ்ட நாட்கள்: ஆக 25 பி. ப. 26, 27<br>
செப் 11 பி. ப. 12, 13 மு.ப.

துரதிஷ்ட நாட்கள்: ஆக 19, 20, 28, 29, 30 மு.ப<br>
செப் 15 பி.ப. 16.



## கும்பம்

**அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் கால்**

கும்பராசியினர்க்கு சூரியபகவான் இரஜத மூர்த்தியாக 7ல் ஆட்சியாகச் சஞ்சரிக்கின்ருர். 9ல் வியாழன் நற்சஞ்சாரம் செய்கிருர். செவ் வாய், சனி 9-ம், 8-ம் ராசிகளில் சஞ்சரிப்பது நன்றல்ல. அதனுல் கஷ்டகாலமாயிருப்பினும் துன் பமேற்படாமல் சூரியபகவான் பாதுகாப்பார். எடுத்த கருமங்கள் மெல்லமெல்லக் கைகூடும். ஆரோக்கியம் சீரடையும். செலவினங்கள் அதி கரித்தாலும் வருமானத்துக்குக் குறைவிராது. தூரதேசத் தொடர்புகள் பாதிப்படைந்தாலும் வியாழன் சமாளிப்பார். பிரயாணங்கள் சிறப்புற மேற்கொள்ள முடியாது.

குடும்பஸ்தர்களுக்கு புத்திரகாரகனும், 2-ம் அதிபதியான வியாழனும் திரிகோணத்தில் சஞ் சரிப்பதால் புத்திர, களத்திர லாபங்கள் ஏற்பட லாகும். இனபந்துக்கள் சேர்க்கை உண்டாகும். கடன்தொல்லைகள் இருப்பினும் கவலைப்பட எது வுமில்லை.

வியாபாரிகளுக்கு வியாபாரி புதன் நன்மை செய்யமாட்டார். வங்கிக் கணக்குகள் நன்ருக இயங்கும். முதலீடுகள் குழப்பநிலையிலேயே இருக் கும். வெளிநாட்டு வர்த்தகம் சிறப்படையாது. கள்ளமார்க்கட் வியாபாரம் லாபகரமாகவிராது.

உத்தியோகத்தர்களுக்கு சூரியன் ஆட்சிபெற் றிருப்பினும் கருமங்கள் சனீஸ்வரன் 8-ம் இடத் தில் சஞ்சரிப்பதால் தடைப்படும். 9ல் வியாழன் மேலதிகாரிகளின் உதவிகளால் பிரச்சினைகளைச் சமாளிக்க உதவுவார்.

விவசாயிகளுக்கு சனீஸ்வரன் 8ல் மிகுந்த நட்டத்தை உண்டுபண்ணுவார். வருமானம் பற்ருக்குறையாக இருக்கும். அரசாங்கத் தொல்லைகள் சூரியன் ஆட்சிப்பெற்றிருப்பதால் குறையும். தானியக் கொடுக்கல் வாங்கல்களுக்கு உகந்த மாதமல்ல.


தொழிலாளிகள் கடினஉழைப்பை மேற்கொண்டாலும் முதலாளிகள் திருப்தியடைய மாட்டார்கள். தொழில் இழப்புகள் ஏற்படக்கூடிய அறிகுறி உண்டு. காலப்போக்கில் நிலைமை சீரடையும்.

மாணவர்களுக்கு கல்வியில் மந்தநிலை உண்டாகும். விளையாட்டு, கலை என்பவற்ருல் மனதை அலட்சியப்படுத்திக் கொள்ள நேரிடும். பெரியோர் உதவிசெய்ய முன்வரினும் 9ல் செவ்வாய் தடுத்துவிடுவார். கடினமுயற்சி வேண்டும்.

பெண்களுக்கு எவ்வித நன்மையுமில்லாவிடினும் சுமாராகச் சமாளித்துக் கொள்ளலாம். காதல் தொடர்புகளில் புதுமையைக் கடைப்பிடிப்பீர்கள். தொழில்பார்க்கும் பெண்கள் அந்தஸ்து உயர்ச்சி ஏற்பட கூடியசிரத்தையுடன் உழைக்கவேண்டும்.

அதிஷ்ட நாட்கள்:- ஆக17,18,28,29,30மு.ப. செப்13பி.ப,14,15மு.ப;

துரதிஷ்ட நாட்கள்:- ஆக 21,22,23மு.ப,30பி.ப, 31, செப்1.



## மீனம்

பூரட்டாதி 4-ம் கரல், உத்தரட்டாதி, ரேவதி

இந்த ராசியில் ஜனனமானேர்க்கு சூரியன் 6-ல் வலம்வந்து கொண்டிருக்கிருர். 7-ல் சனி தடைகளை உண்டு பண்ணுவார். 8-ம் இடத்தில் செவ்வாய் திடீர் இழப்புகளை ஏற்படுத்துவார். மாதா, பிதா வழிக்கவலைகள் உங்களை ஆட்கொள்ளும். சூழ்நிலை மாற்றங்கள், இனபந்துக்களின் குழப்பங்கள் ஏற்படலாகும். வாக்கு, கௌரவம் 8-ல் வியாழனிருப்பதால் பாதிப்படையும். பிரயாணத் தொல்லைகள் அதிகரிக்கும். இருதய பலவீனமான நிகழ்ச்சிகள் உண்டாகலாம்.

குடும்பஸ்தர்களுக்கு களத்திர நஷ்டம், புத்திரத் தொல்லை, பொருள் இழப்பு முதலியவற்றில் பாதிப்புண்டாகும். 2ம் அதிபதி செவ்வாய் 8-ம் இராசியில் மிகவும் தீமையை ஏற்படுத்துவார். சூரியன் ஸ்தான பெலத்துடன் 6-ல் இருப்பதால் சிறிது நன்மை கிட்டும்.

வியாபாரிகளுக்கு சனியுடன் கூடிய புதன் மாதபிற்பகுதியில் நட்டங்களை அதிகமாக்குவார். முதலீடுகளைக் கட்டுப் படுத்துதல் நன்மையளிக்கும். வங்கித்தொல்லையும் கஷ்டம் தரும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் 6-ல் ஆட்சிப் பெற்றிருப்பதால் கவலைப்படத் தேவையில்லை. சகாக்கள் கடமைகளைச் சரிவர மேற்கொள்வார்கள். 8-ல் வியாழன், செவ்வாய் சஞ்சரிப்பதால் காரியாலயத்தில் தவறுகள் ஏற்பட வழிவகுக்கும்.

விவசாயிகட்கு விவசாயி சனி 7-லும், பூமிகாரகன் 8-ம் இடத்திலும் இருப்பதால் சொல்லொணுத் துயரத்துக்கு ஆளாக நேரிடும். இடையிடையே களவு முயற்சிகள் ஏற்படாமலிருக்கக் கவனித்துக்கொள்ள வேண்டும்,

தொழிலாளிகளுக்கு பங்குத் தொழிலாளர் பிளவுபடுவதால் தொழில் பாதிப்படையும். யந்திரங்கள் தொல்லைகள் ஏற்படலாம். சொந்தத் தொழில் வளர்ச்சி பெருது. கூட்டுறவாளர்களுக்கு அதிக கஷ்டமுண்டாகும். பொறுமையுடன் கடமையில் ஈடுபடவும்.

மாணவர்களுக்கு கல்வியில் வளர்ச்சி கிட்டாது. கிரகசாரங்கள் எல்லாத் துறைகளிலும் உங்களைப் பாதிக்கும். வெளிநாட்டுக் கல்விக்கும் உகந்த காலமல்ல. கடின உழைப்பால் சிறு நன்மை கிட்டும்.

பெண்களுக்கு கணவன் சூரியன் 6-ல் ஆட்சியாக இருப்பதால் கணவனின் அந்தஸ்து பாதிப்படையாது: விவாகப் பேச்சுகள் இழுபடும். காதல் தொல்லைகள் அதிகரிக்கும். அவமானத்துக்குள்ளாக்க வியாழனும், செவ்வாயும் முயற்சிப்பதால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அதிஷ்ட நாட்கள்: ஆக 19, 20, 30 பி. ப, 31 செப் 1, 15 பி. ப, 16.

துரதிஷ்ட நாட்கள்; ஆக 23 பி. ப, 24, 25 மு. ப, செப் 2, 3, 4 மு. ப.

உங்கள் இல்லத்தின் பொக்கிஷம்

**திருக்கணித பஞ்சாங்கம்**

சோதிட ஆராய்ச்சி

# தமிழ் ஈழம் மலருமா?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

வே. சின்னத்துரை நல்லூர்

கோப்பாய்த் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைக் கூட்டத்தில் திரு. சி. கதிரவேற்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் இன்று விடுதலை இயக்கம் சோர்வடைந்து விட்டதால், தமிழ் மக்கள் மனதிலே அதிருப்தியும், சோர்வும் ஏற்பட்டுள்ளன. இவற்றை அகற்றி தமிழீழ விடுதலையில் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தவும், தமிழர் கூட்டணியின் செயற்பாடுகள் குறித்து தமிழ் மக்களின் கருத்தை அறியவுமே கிராம யாத்திரை நடைபெறுகிறது. எனவே கிராம யாத்திரையின் போது வரும் தலைவர்களிடம் நீங்கள் உங்கள் சந்தேகங்களையும் விடுதலை நடவடிக்கைகளையும் பற்றித் தாராளமாகக் கேள்விகள் கேட்டுத் தெளிவு பெற்றுக்கொள்ளலாம். தலைவர்களும் உங்களிடமிருந்து தெளிவு பெறலாம். இதற்கு தலைவர் சபாரத்தினம் அபிவிருத்தி குறித்து நீங்கள் கூறிய அதே கருத்துத்தானா உங்கள் சகாக்களின் கருத்தும் என்று கேட்டதிற்கு இது தன்னுடைய சொந்தக் கருத்தென்றும் ஏனையவர்களின் கருத்துக்களை அவர்கள் கிராம யாத்திரையில் வரும்போது கேட்டுத் தெரிந்துகொள்ளும்படியும் கூறினர்.

19-2-81 இல் யாழ். பல்கலைக் கழக மாணவ மாணவியர் பல்கலைக்கழக அனுமதியில் பாரபட்சத்தை எதிர்த்து திடீரென ஒரு பெரிய சட்ட விரோத ஆர்ப்பாட்டத்தையும் ஊர்வலத்தையும் நடத்தினர். இந்த ஊர்வலம் பெரியகடைப் பகுதிக்கு வந்தபோது அங்கு நின்ற பொலீசார் செய்வதறியாது திகைத்து நின்றனர். போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்தன.

31-1-81 இல் வீரகேசரியில் சிங்கப்பூர் பிரதமர் லீ. குவான் யூ இலங்கையைப் பற்றி வெளியிட்ட கருத்து. இலங்கை ஜனாதிபதியை எனக்கு நன்கு தெரியும்; அவர் எனது நண்பர். நான் அதிக மரியாதை காட்டும் ஒருவர். நான் இங்கு சொல்லப் போவதையிட்டு அவர் கோபித்துக் கொள்ள மாட்டார்,

அவரது இலங்கை நாட்டில் படித்தவர்கள் எல்லோரும் ஆங்கில மொழியில் கல்வி கற்றவர்களாக இருந்தார்கள். இலங்கை சுதந்திரமடைந்து ஏழு வருடத்தின் பின், 1956-ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா வந்தார். இனம், மொழி, சமயம் ஆகிய மூன்றின் பெயரால் அவர் அழைப்பு விடுத்தார்.

யாழ்ப்பாணத் தமிழர் காரணமாக சிங்கள இனத்தின் பேரில் அழைப்பை விடுத்தார். அம் மக்களில் நன்றாக ஆங்கிலம் கற்றவர்களில், 10 முதல் 12 சத வீதத்தினராய், யாழ்ப்பாணத் தமிழர் இருக்கிறார்கள். அதுமட்டுமன்றி அரசாங்க சேவையிலும் மற்றும் தொழில் சார்ந்த பதவிகளிலும் அவர்கள் முக்கிய இடங்களை நிர்வகித்து வந்தார்கள்.

சிங்களவர்களே ஜனத்தொகையில் பெரும்பான்மையினராக இருந்தார்கள். எனவே சிங்களவர்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார். சிங்களம் பேசுபவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள்; எனவே சிங்களத்தை அரசு மொழியாக்கினர். சிங்களவர்கள் பௌத்தர்களாகவும் இருந்தார்கள். அதனால் பௌத்தத்தைத் தேசிய மதமாக்கினர்.

இதனால் இலங்கைக்கு என்ன நடந்தது. சகல மட்டத்திலும் சோக காவியமே எஞ்சியது. ஜன 1981 ல் சுதந்திரத் தமிழ் ஈழ நாட்டுக்கான மாதிரி அரசியல் யாப்பொன்றை உருவாக்கும் முயற்சியில் அமெரிக்காவில் இயங்கும் ஈழவிடுதலை இப்போது ஈடுபட்டுள்ளது. இதற்கான ஆலோசனைகளை சர்வதேச அரசியலமைப்பு நிபுணர்களிடம் அது இப்போது சேகரித்து வருகின்றது.

தமிழ் ஈழ நாட்டின் எல்லைகளை வகுக்கவும், தமிழீழத்துக்கான மாதிரி அரசியல் யாப்பை உருவாக்கவும் பொருளாதாரத் திட்டங்களைத் தயாரிக்கவும் தமிழீழத்தின் அரசியல் நிர்ணய சபையை அமைப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு அமெரிக்க ஈழத்தமிழர் விடுதலை இயக்கம் தமிழீழ அரசியல் யாப்புத் தயாரிப்பது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடன் அமெரிக்க ஈழத்தமிழர் விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளர் சிறீதரனும் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழர் மகாநாட்டின்போது

உரையாடினர். இதில் லண்டன் தமிழர் இணைப் புக் குழுவின் அமைப்பாளர் வைகுந்தவாசனும் கலந்து கொண்டார்.

30-1-81 இல் சிங்கள லங்காவின் பிரதமர் திரு. பிரேமதாசா தமிழ் ஈழத்து யாழ்ப்பாணத் துக்கு வருகை தந்தார். இவ்வருகையை தமிழ் ஈழம் பகிஷ்கரித்தது. பல்கலைக் கழகங்கள் பகிஷ் கரிக்கப்பட்டன. பாடசாலை மாணவ மாணவியர் வகுப்புக்களை பகிஷ்கரித்தனர். கடைகள் அடைக் கப்பட்டிருந்தன. வீதிகள் வெறிச்சோடிக் கிடந் தன. பேருந்துகளில் மக்கள் நடமாட்டம் குறைந்தது. ஆதிக்கபுரியின் கொடிகள் தீயிடப் பட்டன. பிரதமர் வரவேற்புச் சுவரொட்டிகள் கிழித்து வீசப்பட்டன. 1974-ம் ஆண்டு தமிழா ராய்ச்சி மகாநாட்டில் இறந்தவர்களுக்காக எழுப் பப்பட்டு இருமுறை அரச காவல் இராணுவப் படையினரால் இருமுறை இடிக்கப்பட்ட தூணை மறுபடியும் நிமிர்த்தி கட்ட வைத்தார் பிரதமர்.

25-3-81 இல் நீர்வேலியில் வைத்து மக்கள் வங்கிக்கு எடுத்துச் செல்லப்பட்ட 68 இலட்சம் ரூபாவை 6 இளைஞர்கள் வழிப்பறி செய்தார்கள். இந்நிகழ்ச்சியின்போது இரு பொலீஸ்காரர்கள் உயிர் நீத்தனர்.

22-3-81 இல் இரவு 12 மணியளவில் மட்டக் களப்பு புளியந்தீவுப் பாலத்தில் இருல் பிடித்துக் கொண்டிருந்த தமிழ் மீனவர்கள் சிங்களப் பொலீசாரால் தாக்கப்பட்டு கடலினுள் தூக்கி வீசப்பட்டார்கள். இதை ஏனென்று கேட்க அந்தப் பகுதி இரு பாராளுமன்ற உறுப்பினர் களுள் ஒருவரும் முன்வரவில்லையாம்.

31-3-81 இங்கிலாந்தும் இந்தியாவும் தான் எங்களுடைய பிரச்சினையை தீர்த்து வைக்க உத வக்கூடிய நாடுகள். அவர்கள்தான் இதை தீர்த்துவைக்க வேண்டிய நாடுகள். ஏனெனில் இரு நாடுகளையும் அதாவது சிறீ லங்காவையும் தமிழ் ஈழத்தையும் சேர்த்து சிங்களவர் கையில் சுதந்திரத்தை ஒப்புவித்தவர்கள் பிரித்தானியர் இலங்கையில் இங்கிலாந்தை விட வேறு ஒரு வல் லரசு செல்வாக்கு கொண்டிருப்பின் இந்தியாவுக்கு அது ஒரு பேரிடியாகும். அபாயமாகும். ஆத லால் இந்த இரு நாடுகளுமே இப்பிரச்சினையில் கரிசனை கொள்ள வேண்டியவர்கள். வேறு வல்ல ரசுகள் செல்வாக்கு ஓச்சுமானல் இலங்கையை சிங்களவர்களையும் தமிழர்களையும் சேர்த்து அவ் வல்லரசுகள் விழுங்கிவிடும் என திரு கதிரவேற் பிள்ளை அபிப்பிராயம் கொண்டிருந்தார். அதற் காக இங்கிலாந்துக்கு ஒரு பாராளுமன்ற உறுப் பினரையும் இந்தியாவுக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினரையும் அனுப்ப திரு கதிரவேற்பிள்ளை மிக முயன்றும் ஒருவரும் இதற்கு முன்வரவில்லை. ஆகையால் தானே திருமதி இந்திரா காந்தியைக் கண்டு இப்பிரச்சினையை முன்வைக்க முயன்றார். இதற்காக இந்தியப் பிரதமரைக் காண இந்திய தூதுவரிடம் அனுமதி கோரினர்: இது ஒரு உள் நாட்டுப் பிரச்சினையென்றும் நாட்டை இரண்டு துண்டாக்குவதில் இந்தியாவுக்கு அக்கறையில்லை யென்றும் ஆகையால் அனுமதி தர முடியா தென்றும் தூதுவர் கூறிவிட்டார். என்றும் கோபம் வராத திரு. கதிரவேற்பிள்ளைக்கு ஆத் திரமும், ஆவேசமும் வந்துவிட்டது. அப்படி இருந்தும் அவர் இன்னும் விளக்கமாக "நாட் டைப் பிரிக்க விரும்பாத நீங்கள் ஏன் பாகிஸ் தானுக்குள் உங்கள் படைகளை அனுப்பி பங்க ளாதேசத்தைப் பிரித்தீர்கள் எனக் கேட்டார். அதுவும் பாகிஸ்தானின் ஒரு உள்நாட்டுப் பிரச் சினைதானே" என்று வாதிட்டார். இவ்வாதத் திற்கு தூதுவருக்கு விடை பகர முடியாமல் வாயடைத்து விட்டது. பின்பு இந்தியப் பிரத மரை நேர்முகமாகப் பார்க்க உத்தரவளித்தார். இதற்கு முனனரே பிரதமரிடம் எழுதி திரு. கதிரவேற்பிள்ளை பிரதமரிடம் உத்தரவு பெற்றி ருந்தார். எனினும் சம்பிரதாயங்கள் கைக்கொள் ளப்பட வேண்டியிருந்தது. அவர் இந்திரா காந் தியைப் பார்ப்பதற்கு முன்பே சென்னையில் மாரடைப்பினல் காலமானர். அவருடைய கருத் துக்களிற் சில: "உண்மையுள்ளவன் இரண் டொரு சொற்களால் தன்னை மற்றவர்க்கு விளக்குவான். பொய்யன் பிரசங்கம் செய்தும் தன் ஈனத்தை மறைக்க மாட்டான். அதிகமாக பேசுபவர்கள் ஒன்றைப் புனைந்துரைக்க வேண் டும்; அல்லது மூடி மறைக்க வேண்டும்; அல் லது திரித்துக்கூற வேண்டும். சில சொற் பேசும் ஒருவன் சிந்தித்துத் தெளிந்து அளந்தே வார்த் தையாடுவான்; சுருங்கச் சொல்லி விளங்க வைப்பான்." இதற்கமையவே திரு. கதிரவேற் பிள்ளை தன்னை ஆக்கிக் கொண்டார். (தொடரும்)

**மழை**

இவ்வாண்டு பருவமழை வழாது பெய் யும். கார்த்திகை தொடக்கம் அடை மழையாக இருக்கும். -- Dr. K. N. N.

# ஜன்ம இலக்கினம்

## மகர லக்னம்

★

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அ. சிவசுப்பிரமணியம், B. A. (Lond) மல்லாகம்.

இக்கலியுக வாழ்வுக்கு வேண்டிய சுகபோகங் களைத் தரவோ அன்றேல் 'திடீர் அதிஷ்டத்தை' ஏற்படுத்தவோ கூடிய அதிகாரம் வாய்ந்த பிரதான கிரகம் அசுர குருவாகிய சுக்கிரனே. பிரதானமாகச் சுக்கிரனோ, லக்கினாதிபதியோ உபசயஸ்தானங்களாகிய 3-ம், 6-ம், 10-ம், 11-ம் வீடுகளில் இருந்தால் விவாகத்துக்குப்பின் தான் ஜாதகர் அதிர்ஷ்டமுள்ளவராக மாறுவார். மகர லக்ன காரர்களுக்குச் சுக்கிரன் 10-ம், 3-ம், வீடுகளில் வலுவாக இருந்தால் 'சுக்கிர ஆதிக்கம்' ஏற்படும். சுக்கிர ஆதிக்கம் பெற்றவர்கள் பொதுவாக மற்றவர்களை வசப்படுத்தித் தாம் சுகமாக் வாழும் வகையில் மிகச் சாமத்தியம் வாய்ந்தவர்கள் ஆவர். சுகபோக வாழ்வையே பெரிதும் விரும்பி ஐம்புலன்களால் அனுபவிக்கக் கூடிய அனைத்தையும் நன்கு நாடி நிற்பர். ஸ்திரிகளில் சுக்கிர ஆதிக்கம் வலுப்பெற்றவர்கள் மணமகள் போல் சோபிப்பர். இவர்களின் நடமாட்டம் மனோகரமாகவும் கம்பீரமாகவும் தோன்றும். சாதாரண குடும்பத்தில் ஜெனனமானவராயினும் சகல வகையிலும் தமக்கு மேம்பட்ட அந்தஸ்தில் உள்ளவரால் நேசிக்கப்பட்டு அவரைத் திருமணஞ் செய்து செழிப்பான வாழ்வு வாழ்வர். மகரலக்கின காரரின் களத்திராதிபதி (7-ம் அதிபதி) சந்திரனாகையால், சந்திரலக்ன ரீதியாகவும் சுக்கிரனும் ஏனைய யோகர்களும் சுப ஆதிபத்தியம் பெற்று வலுப்பெறுவரேல் யோகப்பிரபல்யம் ஏற்பட்டு ஜாதகரின் வாழ்வு மிகமேன்மை அடையும். சுக்கிரன் புதன், சனி ஆகிய மூவருள் இருவர் ஒன்று சேர்ந்து பாபர்களின் சம்பந்தம் பெறாது இஷ்ட ஸ்தானங்களில் நின்றாலும், தனித்தனி நின்று ஒருவரை ஒருவர் சமசப்தமமாகத் திருஷ்டித்தாலும், அன்றேல் பரிவர்த்தனம் எய்தினாலும் சிறந்த இராஜ யோகம் ஏற்படும். புதனும் சுக்கிரனும் பாபரான சூரியனுடன் சம்பந்தப்படாது சேர்வது மிக அரிதென அறிக. கர்மனாகிய 10 க்குடைய சங்கநிதியாகிய சுக்கிரன் நீசபங்க ராஜயோகம் பெற்று நிதியென்னும் 9-ம் இடத்தை அலங்கரிக்க தர்மனாகிய 9 க்குடைய கல்விதருனாதனாகிய தன் ராஜஸ்தானமான 10-ம் இடத்தை மேவுவதால் ஏற்படும் ''தர்மகர்மாதிபதியோகம்'' மிகப்பலம் வாய்ந்த முதற்தர இராஜயோகமாகும். இன்னிலையில் லக்கினாதிபதியான சுடர்மகன் சனி லக்கினத்தில் அமர்ந்தால் 'சசயோகமும்,' அன்றேல் 10-ல் புதனுடன் கூடினால் 'லக்குமியோகமும்' ஏற்படுமென அறிக. இவை முன் கூறிய 'தர்மகர்மாதிபதியோகத்தின் தரத்தை மோகன நிலைக்கு உயர்த்தி ஜாதகத்தை மிகப்பொலிவுடன் விளங்கச் செய்கின்றன.

மகரலக்கின காரர்களுக்கு முதல்வனான சனீஸ்வரன், கர்மனாதிய சுக்கிரன், தர்மனாகிய புதன் ஆகிய பரஸ்பர நண்பர்களும் யோகர்களுமான திருமூர்த்திகள் முறையே உச்சம், ஆட்சி, நட்பு ஆகிய ஸ்திதிகள் பெற்று முதன்மை முறைப்படி [Order of Precedence] புனிதமாக வலுவுடன் இணைந்து உச்ச கேந்திரமென்னும் 10-ம் வீடாகிய சுக்கிரனின் (சர ராசியாகிய) துலாராசியை அலங்கரிப்பரேல், கபில நாடி, பராசரஸம்ஹிதை, சாராவளி, ஜாதகபாரிஜாதம், பலதீபிகை ஆகிய பிரசித்தி பெற்ற சோதிட சாஸ்திரங்களால் பெரிதும் போற்றப்படும் 'இஷ்டபல யோகம்' 'தர்மகர்மாதிபதியோகம்', 'இலக்குமி யோகம்', 'சசயோகம்', 'மாளவ்யயோகம்' ஆகிய ஐம்பெரும் ராஜயோகங்கள் கும்பலாக உருவாக்கித் துரிதமாகத் தாண்டவமாடுமென்றும், அவற்றின் விளைவால் ஏற்படும் தீவிர மின் சக்தி ஜாதகம் பூராவும் பரந்தோடி ஜாதகத்தை மகோன்னத நிலைக்கு உயர்த்தி ஜொலிக்கச் செய்வதோடு இராஜயோகதி, தனயோகாதி பலன்களையும். மற்றப்பாபோற்பலமான பலன்களையும் ஜாதகருக்கு யோக தெசா புத்தி காலங்களில் தாராளமாக அள்ளி அள்ளி வீசுமென்றும் உறுதி கூறற்பாலதாம். மேற்கூறிய யோக திருமூர்த்திகளிருக்கும் துலா ராசியை லக்கினமாகக் கொண்டு ஆராயும் பொழுது லக்கினாதிபதியான சுக்கிரன் அங்கு மூலத்திரிகோண பலத்துடன்

இருக்க, அவ்வீட்டுக்குரிய சகல யோககாரகர்களும் அவனுடன் பரிசுத்தமாக இணைந்து யோக பிரபலத்தை ஏற்படுத்துவதைக் காணலாம். புதன், சுக்கிரன், சனி ஆகியோர் யோக காரகர்களாக ஒன்று சேரும்பொழுது, ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறைப்படி இணைந்தால்தான் யோக பலன் சித்திக்கும், புதன், சுக்கிரனிலும் பார்க்க வேகமாகச் செல்லும் கிரகம், சுக்கிரன், தாண்டித் தாண்டிச் செல்லும் சனியிலும்பார்க்க வேகமாக நடைபோடும் கிரகம். ஆகவே மந்த நடைபோடும் கிரகம். வேகமாகச் செல்லும் கிரகத்திலும் பார்க்க முன்னேறிச் செல்வரேல் பலமான ராஜயோகம் சித்திக்கும். இதற்கு மாருக இருப்பின் சிலசமயங்களில் இராஜயோகம் திசை திருப்பப்படவோ அன்றேல் பலவீனமடையவோ நேரும். உதாரணமாக, மகரலக்கினகாரர்களுக்குத் தசமகேந்திரமான 10-ம் வீடாகிய துலா ராசியில் புதன், சுக்கிரன், சனி ஆகிய திருமூர்த்திகள் முறையே 5-ம் பாகை, 11-ம் பாகை, 20-ம் பாகை ஆகியவற்றில் நிற்பரேல் முதற்தரமான ராஜயோகம் ஏற்பட்டு ஜாதகம் ஜொலிக்குமென்றும் ஜாதகர் இராஜயோக அதிகார தீர துரந்திரனுய் இலக்குமி கிருபை பெற்றுச் சிங்கார மாளிகையில் போக போக்கியங்களுடன் நெடு நாள் சுக வாழ்வு வாழ்வரென்றும் கூறற்பாலதாம். லக்கினுதிபதி தனுதிபதியாகிய சனிக்கு முன்னதாகப் பிதுர் பாக்கியஸ்தானுதிபதியான புதன் செல்வதால் ஏற்படும் ராஜயோகம் ஜாதகரின் நிந்தைக்கே பிரபல யோகத்தை நல்குமென்றும் ஜாதகர் பிதாவுடன் வாழும்வரை யோக பலன்களை அனுபவிப்பரென்றும், பிதாமறைய யோகமும் படிப்படியாக மறைந்து ஜாதகருக்கு பலதுன்பங்கள் ஏற்படுத்துமென்றும் ஜோதிட மேதைகள் கூறுகின்றனர். பொதுவாக புதன், சுக்கிரன், சனி ஆகிய திருமூர்த்திகள் 3-ம், 6-ம், 8-ம், 12-ம் வீடுகளில் ஒன்று கூடுவரேல் யோக பங்கம் ஏற்பட்டு சொல்லொணுத்துன்ப சங்கடங்கள் சம்பவிக்கும் என்பர். (தொடரும்)

## தெரியுமா?

**ஸப்தரிஷி மண்டலத்திலுள்ள ரிஷிகளின் பெயர்கள்**

கிரேது, புலகர், புலஸ்தியர், அத்திரி, அங்கிரஸ், வசிட்டர், மரீசி.

# பிறந்த திகதிப்படி உங்கள் திறமை சாமர்த்தியம்

வே. சின்னத்துரை, நல்லூர்

நீங்கள் எந்த வருடத்திலாயினுஞ்சரி, எந்த மாதத்திலாயினுஞ் சரி ஏதோ ஒரு திகதியில் பிறந்திருப்பீர்கள். பிறக்கும் ஒவ்வொரு திகதிக்கும் ஒரு பலனுண்டு. பரவலாக அவற்றை இங்கே கூறுவாம்.

## திகதி 26-ல் பிறந்தவர்கட்கு

இத்திகதியில் பிறந்தவர்கள் துணிகரமான செயல்களைச் செய்வதிலும் ஒரு காரியத்தை தைரியமாக ஆரம்பிப்பதிலும் சிந்தை கொள்வார்கள். சீர்திருத்தங்களை முன்கொண்டு வருவதிலும் திறமான முறையில் பொருளாதாரத்தைக் கையாள்வதிலும் நீர் பின்னிற்க மாட்டீர். உம்முடைய எண்ணங்களெல்லாம் முன்னேற்றப்பாதையை நாடும். முற்போக்குப் பாதையை நாடும் எண்ணங்கள் உம்மைத் தூண்டிவிடும். உம்முடைய கடமையை நீர் அசட்டை செய்ய மாட்டீராயினும் உமக்கு அதிஷ்டத்தில் பேராவல் கிடையாது. அல்லது அதில் உயர் நிலைமையை வேணும் என்று எண்ணமாட்டீர். இரகசியத்தை இரகசியமாக வைப்பதில் நீர் முயற்சியுடையீர். உம்முடைய நண்பர்கள் தன்னும் அதில் பிரவேசிப்பதை நீர் பொறுக்கமாட்டீர்.

உம்முடைய தொழிலிலும் சொந்தச் சீவியத்திலும் மிகவும் ஆழமான முக்கியத்துவம் வாய்ந்ததாயிருப்பினும் உம்முடைய சொந்த தோற்றத்தையும் எழிலையும் நீர் கவனிக்க வேண்டும். ஆனுல் நீர் இவற்றை அனுவசியமெனக் கருதுவீர். கலையுணர்ச்சி உமக்கில்லாவிடில் உம்முடைய நடையுடை பாவனைகளை சரியாக எடைபோட முடியாவிடில், அதற்குப் புத்தி மதியைக் கேட்டு அதன் படி நடக்கமுயற்சியும். பெரிய விடயங்களில் தான் உமது மனம் படியும். அதை அசைக்க முடியாமல் வைத்திருப்பீர். கொஞ்சம் விட்டுக் கொடுத்து சாகசங்களைக் கையாளப் பழகுங்கள்.

# அதிஷ்ட எண் ஞானம்

இ. மகாதேவா — கொழும்பு-11.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சென்றமுறை எழுத்துக்களின் மதிப்பு எண் களைப் பார்த்தோம். இம்முறை கிரகங்களுக்குரிய மதிப்பு எண் அல்லது ஆதிக்க எண்களைப்பற்றிப் பார்ப்பதன் பின்பு விளக்கமாக ஒவ்வொரு எண் களைப்பற்றிச் சிந்திப்போம்.

**கிரகங்களுக்குரிய ஆதிக்களண்** (மதிப்பு எண்)

| எண் | | கிரகம் |
|---|---|---|
| 1 | — | சூரியன் |
| 2 | — | சந்திரன் |
| 3 | — | வியாழன் |
| 4 | — | இராகு |
| 5 | — | புதன் |
| 6 | — | வெள்ளி |
| 7 | — | கேது |
| 8 | — | சனி |
| 9 | — | செவ்வாய் |

இந்த எண்களில் வரிசைக்கிரம எண்ணையா? அல்லது கணியக்கிரம எண்ணையா? நாம் எமது அதிஷ்ட எண்ஞானத்தில் கைக்கொள்ளுவது என் பது முக்கியமாகும். 1,2,3 என வரிசைப்படி வரும் எண்களும் — சூரியன், சந்திரன், செவ் வாய், புதன் என வரிசைப்படி வரும் கிழமை நாட்களின் கிரகங்களையும் நாம் நேரடியாகச் சொல்லமுடியாது. 1,2,3 எனவருவதால் ஒன்றை விட இரண்டோ அல்லது மூன்றோ பலம்வாய்ந்த எண்கள் என எண்ணிவிடக்கூடாது. ஏனெனில் ஒவ்வொரு எண்களும் வேறுபட்டதன்மை உடை யன. அதேபோன்று கிழமை நாட்களும் ஒன்றை விட ஒன்று வேறுபட்ட தன்மை உடையன. எனவே எண்களும் 1 2 3 4 ......... 9 வரிசைப் படிவருகிறது. அதேபோன்று ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன் என வரிசைப்படிவருகிறதென நாம் எடுத்து எண்களை கிழமை நாட்களை ஒப் பிட்டு எண்களை இட்டுவிடமுடியாது. ஏனெனில் எண்களின் தன்மைகளுடன், கிரகங்களின் தன்மை களை கணித்து பெறுமான ரீதியாக நாம் அளவிடுவதிலேயே எமது நோக்கம் இருக்கவேண்டும்.

அதுபோன்று கிரகங்களின் . தன்மையான அவற்றின் நிண்ணுலக அனுபவம்பெற்ற ஞானி கள், மேதைகள் இக்கிரகங்களின் மதிப்பு எண் களை எமக்குத் தந்துள்ளார்கள். அதன்படி கிர கங்களின் மதிப்பு எண்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சூரியன் | - 1 | புதன் | - 5 | சனி | - 8 |
| சந்திரன் | - 2 | வியாழன் | - 3 | இராகு | - 4 |
| செவ்வாய் | - 9 | வெள்ளி | - 6 | கேது | - 7 |

இக்கிரக மதிப்பு எண்கள் பல நூற்றுண்டு காலமாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பாவிக்கப்பட்டு வருகின்றது. இவ்வடிப்படையில் பல கோடிக்கணக்கானேர் பலன் பெறுகின்ருர் கள். எனது அனுபவத்தின்படி ஆயிரக்கணக்கான வர்களுக்கு இவ்வடிப்படையில் பெயர்மாற்றிக் கொடுத்தும், கிரகப்பலன்களைச் சொல்லியும் கிர காதிக்கத் தன்மைகளை உணர்ந்தும் இப்பொழுதும் செயற்பட்டு வருகின்றேன். இம்மதிப்பு எண் களின் கணக்கு என்றுமே பிழைக்காமல் மிகஆச் சரியமான முறையில் பலனைக் கொடுக்கின்றது. சோதிடமா? எண்ஞானமா? என்று பரிகசித்தோர் கூட அவற்றின் அபாரமான சக்திமிக்க பலனை அனுபவரீதியாக உணர்ந்து இது ஒரு சாதாரண கலையல்ல, ஒரு தெய்வீகக் கலையென்று ஏற்றிப் போற்றிப் பலனை அனுபவிக்கின்ருர்கள். இம் மதிப்பு எண்ணையே நாம் கிரகங்களின் ஆதிக்க எண் என்கிருேம்.

ஒரு எண்ணிற்கு எந்தளவு வலிமையுண்டோ அந்தளவு கிரகசக்தி அவரை ஆட்கொள்ளும். எண் சக்தியை அதிகரித்தால்தான் அவ்வெண்ணுக்குரிய கிரகசக்தியும் அதிகரிக்கும். அடுத்து ஒவ்வொரு எண்களைப்பற்றியும் படிப்படியாகப் பார்ப்போம்.

# எண் 1 சூரியன்

## முதன்மை

### சூரியபகவான்

அகில உலகத்தின் இயக்கக் கதாநாயகன் சூரியபகவானே ஆகும். சூரியன் இல்லையேல் ஒளி இல்லை, வெப்பமில்லை, பருவகாலங்களோ, உயிர்களோ தோன்றியிருக்காது. ஞாயிறு, பரிதி, பாற்கரன், ஆதித்தன், மித்திரன், கதிரவன், தினகரன் எனப்பல நாமங்களால் சூரியனை அழைக்கின்றனர். பூமிக்குச் சமீபத்தில் உள்ள சந்திரனுக்கு ஒளியைக் கொடுப்பவனும், ஏனைய கிரகங்களைத் தனது சக்தியின் வலிமையால் இயங்கச் செய்பவனும், நவக்கிரகங்களின் தலைவனாக இருப்பவனும் சூரியனேயாகும். நமது கண்களுக்கு உலகத்தைத் தெரியப்படுத்துபவன் சூரியனாகும். உலக உயிர்களின் பிறப்பின் ஆக்கசக்தியின் இரகசியம் சூரியனிடத்தே அடங்கியுள்ளது. சூரிய சக்தியாலேயே உலக அணுக்கள் எல்லாம் இயங்குகின்றன. பூமியானது 1 நாளில் 24 மணித்தியாலங்கள் தன்னைத்தானும், சூரியனை 365¼ நாட்களிலும் சுற்றி வருகிறது. சந்திரன் பூமியை அண்ணளவாக 28 நாட்களில் சுற்றி வருகின்றது. இந்த அடிப்படையிலேயே திகதிகள் பிறக்கின்றன. இவ்வாறு உலக இயக்கக் காலக் கணிப்பு ஏற்படுகின்றது. மேற்படிவரும் திகதிகளை உலக வழக்கில் பாவித்து வரும் 1 முதல் 9 வரையும் வரும் எண்களுக்குள் அடக்கி, அவ்வாறு வரும் எண்களை அதிஷ்ட எண்கள் எனக் குறிப்பிடுகின்றோம். அதிஷ்ட எண் ஞானத்தில் 1-ம் எண் கிரகமாக சர்வசக்தி மயமான சூரியனை எடுத்துக் கொள்ளுகின்றோம்.

### 1-ம் எண் ஆதிக்கர்கள்

எந்தவொரு மாதத்திலும் 1,10,19,28-ம் திகதிகளிலும் ஜூலை 21 தொடக்கம் ஆகஸ்ட் 20-ம் திகதிவரையான அல்லது மார்ச் 21 தொடக்கம் ஏப்ரல் 19-ம் திகதிவரையான காலத்துள் பிறந்தவர்களும் பெயர் மதிப்பு ஒன்றை எண் அல்லது கூட்டு ஒன்றை எண் ஒன்று (1) ஆக உள்ளவர்களும் சூரிய உச்ச நேரத்தில் (மத்தியானம்) பிறந்தவர்களும் சூரிய ஆதிக்கம் பெற்றவர்களாவர்.

ஒருவருக்கு மேற்குறிப்பிட்ட எல்லா அம்சங்களும் அமைந்துவிட்டால் அவர் பூரண சூரிய ஆதிக்கராவர். அவருக்கு தொடர்ந்து சொல்லப்படும் அத்தனை பலன்களும் பொருந்திவரும். ஏனையோர் தமது ஏனைய எண் ஆதிக்கப் பலன்களையும் கூட்டு எண், பெயர் எண் பலன்களையும் சேர்த்துப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

### பிறப்பு ஒற்றை எண் - 1ன் குணவியல்புகள்

கெம்பீரமான தோற்ற அமைப்புள்ளவர்கள். கூர்மையான முகச்சாயலும் உறுதியான உடலமைப்பும் கொண்டவர்கள். உடலில் சக்திமிகுந்து காணப்படும். ஆண்தன்மை, அதிகாரத்தன்மை, வேலையில் பிடிவாதம் உறுதி என்பன இருக்கும். அவையே வெற்றியைத்தரும். முன்னேற்ற ஆசை மிகுந்தவர்கள், எவருடைய கட்டுப்பாட்டையும் விரும்பமாட்டார்கள். இவர்களை யாரும் அதிகம் கட்டுப்படுத்த முயன்றால் அதிலிருந்து வெளியேறவும், பிரச்சினைகளை ஏற்படுத்தவும் செய்வர். இவர்களின் சொற்களுக்கு ஏனையோர் கட்டுப்படுவர். நீதிக்கு மாறாக எவராவது நடந்தால், அவர் யாராக இருந்தாலும் எதிர்த்துப் போராடுவார்கள். இதனால் பலரைப் பகைத்துக் கொள்ளுகின்றார்கள். ஒரு விஷயத்தை பலமுறை யோசித்து ஆராய்ந்து தீர்க்கமான முடிவு எடுப்பார்கள். எவருக்கும் நல்ல, உயர்வான ஆலோசனைகளை வழங்குவார்கள். எந்த இரகசியங்களையும் நீண்டநாள் காப்பாற்றமாட்டார்கள். பிறரின் அசைவுகள் செயல்களை ஒருசில கணத்தில் கணித்துவிடுவார்கள். நுண்ணறிவு கொண்டவர்கள், கௌரவமாக மற்றவர்களை மதித்து நடப்பார்கள். நிர்வாகத்தன்மை உடையவர்கள். தன்னம்பிக்கை மிகுந்தவர்கள். பணத்தைப் பெரிதாக மதிக்கமாட்டார்கள். பசித்தோருக்கும், தன்னைத்தேடி ஓடிவரும் நலிந்தோருக்கும், அன்பர்களுக்கும் பல உதவிகளைச் செய்து அவர்களை மேல்நிலைக்கு உயர்த்தி வாழ வழிவகுத்துக் கொடுப்பார்கள். எதிர்ப்பாலாரின் செல்வாக்கு, மதிப்பு, அனுதாபம் எப்பொழுதும் கௌரவமாக இருக்கும். இவரது உதவிகளாலும் பேச்சுத்திறமையாலும் ஏனையோர்கள் கவரப்படுவார்கள். ஆனால் தொழிலிடத்தில் பிறரின் குறைகளை இவர்கள் கண்டிப்பதால் பலரைப் பகைத்துக் கொள்வர். இவரைப் புறங்கூறும் பலரும் இவரைக் கண்டதும் தம்மையறியாது வணக்கம் செலுத்துவர். எதிரிகளை அதட்டிப் பேசி மடக்கி விடுவர். ஆன்மா, மனோ, சரீரசக்தி இவர்களுடன் கூடியிருக்கும். பசித்தோர் பார்த்திருக்க புசிக்கமாட்டார்கள். எல்

லாரிடத்தும் தகுதிக்கு ஏற்றவிதமாக நடந்து கொள்ளும் இவர்கள் மக்களின் நன்மதிப்பைப் பெறுவார்கள்.

### தொழில்கள்

இவர்கள் பொதுவாக எந்தவொரு தொழிலிலும் முன்னேறலாம். அரசாங்கத் தொடர்பான தொழில்கள் கட்டுப்பாடு குறைந்த பொறுப்பான கண்ணியமான உயர் அதிகாரிகளாக பல இடங்களில் பதவி வகிக்கின்றார்கள். எழுத்துத்துறை, சட்டத்துறை, அரசியல், தியாகிகள், படைவீரர்கள், நிர்வாகிகள், சமயம் சாஸ்திரம் வைத்தியத் தொடர்பான தொழில்கள், பலசரக்கு விற்பனையாளர்கள், சமூகசேவை, வங்கி, ஆசிரியர்கள். மின்சார, நெருப்பு சம்பந்தமான பொறி இயக்குனர்களாக இருக்கின்றார்கள். ஆதிக்கப்பலன் குறைந்தவர்கள் சாதாரண எழுதுவினைஞர்களாக ஆரம்பப் பதவியை ஏற்று படிப்படியாக உயர்ந்து வருவார்கள். ஒருவருடைய தொழிலை தீர்மானிக்கும் பொழுது அவரது கூட்டு எண்ணும் சேர்ந்தே தீர்மானிக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

### பிறந்த திகதியும் பலன்களும்

**1-ம் திகதி:-** பிடிவாதமான குணத்தால் பலரைப் பகைத்துக் கொள்வர். மானம், மரியாதை, சுயகௌரவம் என அடிக்கடி பேசிக்கொண்டிருப்பார்கள். புதிதாக எதையாவது ஆராய்ந்துகொண்டிருக்கும் இவர்கள், எதிலும் இலகுவில் திருப்திகாண மாட்டார்கள். செல்வமும், மக்களிடத்தில் செல்வாக்கும் இருக்கும். எல்லோராலும் விரும்பப்படுவர். பலவிசயங்களில் ஆடுகடித்த மாதிரி விட்டு விட்டுச் செயற்படுவர். எந்த விசயங்களையும் ஆரம்பத்தில் ஊக்கத்துடன் தொடங்குவார்கள். யாரும் ஊக்கப்படுத்தாதவிடத்து சோர்வு ஏற்படும். தனது சுய எண்ணத்துடன் பிடிவாதமாக இருந்தால் உயர்நிலையை அடைவர். இவர்களது குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள் இவரை அதிகம் தாக்கத்துக்கு உள்ளாக்கும். வாழ்க்கைத் துணைவரின் இனஜனங்களுடன் வீண் பகைமை ஏற்படும். குழந்தைகளால் வேதனையும் சோதனையும் அடைவார்கள். இவர்கள் எந்த இரகசியங்களையும் காப்பாற்றமாட்டார்கள். பிறரிடம் சொல்லி ஆறுதலடைவார்கள். தான் முன்னேறவும், தமது சுய கருத்துக்களைச் செயலாக்கவும் தமது 30 வயதிற்குப் பின்னரே நடவடிக்கை எடுப்பார்கள்.

**10-ம் திகதி:-** இத்திகதியில் பிறந்தவர்கள் அதிஷ்டமானவர்கள். காற்றுள்ளபோது தூற்றிக்கொள்வார்கள். சந்தர்ப்பங்களைத் தவறவிடாது. முன்னேற முயலுவார்கள். பொதுவாக சகடயோக வாழ்வு ஏற்படும். இளமையில் காதலுக்கு முக்கியத்துவம் கொடுப்பர். தைரியமாக தனது கொள்கைகளை நிலைநாட்டி வெற்றிபெறுவர். சோம்பலை விரட்டி வாழ முற்படவேண்டும். இவர்களால் எதையும் மறைக்க முடியாது. மற்றவர்களின் பலவீனத்தை அறிந்து செயற்படுவர். ஆண்மை மிகுந்தவர்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் இருந்தால் புகழ் வார்ந்தபடி இருக்கும். பொருள் படிப்படியாகப் பெருகி வரும். இலாபம் இல்லாவிடில் பொதுநலத் தொடர்பை விட்டுவிடுவர். சமயத்துறையில் ஈடுபாடு வளரும்.

**19-ம் திகதி:-** இத்திகதிகளில் பிறந்தவர்களில் படபடப்புத் தன்மை, ஆணவத்தால் பழிவாங்கும் செயல், முரட்டுத்தனம் என்பன இருக்கும். எதையும் துருவித் துருவி ஆராய்வர். குடும்பப்பாசம் நிறைந்த எண்ணும். நேர்மையுடனிருந்தால் மற்றவர்களின் உதவி, உழைப்பு இவரை வந்து சேரும். இல்லாவிடில் இழிநிலை அல்லது அவமானங்கள் ஏற்படும். பொதுவாக வாழத்தெரிந்த அதிஷ்டசாலிகள் தமத எதிர்காலத்தை இரகசியமாக இவர்களே அமைத்துக் கொள்வார்கள். உடல், மனோ சக்தி மிக்கவர்கள். காதல் மன்னர்கள். அழகான அங்க அமைப்பு உள்ளவர்கள். ஆனால் ருசியாக சமைக்கும் மனைவி கிடைப்பாள். மற்றவர்கள் வாழப் பல திட்டங்களை உருவாக்கிக் கொடுப்பார்கள். மற்றவர்களில் இரகசியங்களை அறிந்து செயல்படுவர். ரோசம் மிகுந்த இவர்கள் மற்றவர்களுக்கு ரோசம் வரச்கூடிய தாக வசனங்களை அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பார்கள்.

**28-ம் திகதி:-** தத்துவம் பேசுவார்கள். தனித்து வாழ விரும்புவர், எதையும் இறுதிவரையும் முடிக்கத் தெரியாதவர்கள். சிறுசிறு தவறுகளை பெரிதாக்கி எல்லோரையும் குறை கூறித்திரிவார்கள். தாழ்வு மனப்பான்மையால் சந்தேகவாழ்வு ஏற்படும். பிராரப்தவினைகள் வாட்டியெடுக்கும். இரகசியமாக மந்திர தந்திர உதவிகளை நாடுவர். அல்லது புத்தகங்களை வாசித்து நடைமுறைப்படுத்துவர். துணைவரின் சகோதரவழியால் எதிர்ப்புக்கள் ஏற்படும். இனசனவிரோதம் சகஜம். திடீரென அதிர்ச்சிச்சம்பவங்களும், போராட்டநிலையும் ஏற்படும். பிறரை நம்பிக்கெடுவர். 'நம்பநட நம்பிநடவாதே' என்றவாக்கியம் இவர்களைப் பொறுத்தவரை மிக பொருத்தமானதாகும். சாதாரணமாக வாழ்க்கையில் விழுந்துவிழுந்து எழும்பலாம். தொழில்களை அடிக்கடி மாற்றிக்கொள்வர். (தொடரும்)

# சதாவதானி கதிரவேற்பிள்ளையின்

# காலடிச்சுவட்டினிலே!

['பவானி' பருத்தித்துறை]

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**சதாவதானஞ் செய்த சிறப்பு:**

மேலைப்புலோலியிலுள்ள தம்பசிட்டியில் உறைந்திருக்கும் புதுச்சந்நிதி கந்தசாமி கோயிலும், பருத்தித்துறை நகரின்கண் எழுந்தருளியிருக்கும் பசுபதீஸ்வரர் கோயிலிலும் முறையே சோடசாவதானமும் அஷ்டதசாவதானமும் செய்து சிறப்பு உற்றபின் பிள்ளையவர்கள் தமிழகத்திற்கு விரைந்தார்.

சென்னையை அடைந்த பிள்ளையவர்கள் உடனே புரசையடைந்தார். அங்கு ஸ்ரீ கங்காதரேசுரப் பெருமானது ஆலயத்தின் ஸ்ரீமத் நாகசாமி குருக்கள் இல்லத்தே போஜன முதலியவைகளைப் பெற்று வந்தார்.

இவ்விடத்தில் உறைந்திருந்து எட்டு நாட்களாக சதாவதான விளம்பரங்களையும் வெளியிட்டார்கள்.

1907-ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 24-ம் திகதி ஆதிவாரம் சென்னையில் பிரபல்யமடைந்த இலட்சுமி விலாச மண்டபத்தில் நடைபெறுமென விளம்பரமிடப்பட்டது. அக்காலை பிள்ளையவர்களுக்கு சந்திரதசை இராகு புத்தி சந்திர அந்தரம் நடைபெற்றது. இது 3-3-1907 வரையும் நடைபெற்றது.

இவர் காலத்தில் தமிழகத்தில் சதாவதானஞ் செய்யும் சிறப்பை எவரும் பெற்றிலர். இவர் செய்யும் முறையையும், சிறப்பையும் கேட்டும் பார்த்தும் அறிந்த பின்புதான் பலர் இவருக்குப் பின் இச் சாதனையை நிலை நாட்ட முயன்றனர். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் தஞ்சை சுப்பிரமணிய ஐயர், கா. பா. செய்குத்தம்பி, தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் ஆகியோர்களாம். எனினும் இவர்கள் சிலரின் சாதனையில் பல குதர்க்கங்களும் குளறுபடிகளும் நிரம்பியதாகக் காணப்பட்டன. அவையோர் விடுத்த கேள்விக் கணைகளை குதர்க்கம் பேசித் தட்டிக்கழித்ததாக பார்வையாளர்களே கூறியவை குறிப்பிடத்தக்கது. அவர்களில் செய்குத்தம்பியிடம் தர்க்க வாதத்திற்குப் பதிலாக குதர்க்கம் நிலைத்து விட்டது. அதனால் பல இரசிகர்கள் இவருக்கு ஒரு சிலேடைப் பெயரையும் சூட்டிவிட்டார்கள்.

தமிழ்ப் புலவர் சுப்பிராய செட்டியார் சோடசாவதானமும், சுசீந்திரம் பெ. ஆறுமுகம்பிள்ளை பேறை சொர்க்கநாதப்பிள்ளை ஆகியோர்கள் தசாவதானமும், புரசை சபாபதி முதலியார், பூவைக் கலியாணசுந்தர முதலியார், வடுவூர் இராமசாமி ஐயங்கார் முதலியோர் அட்டாவதானமும் செய்து சிறப்புற்றார்கள்.

''அருட்பா-மருட்பா'' வழக்கில் ஏற்பட்ட தோல்வியினாலும் அவமானத்தினாலும் காழ்ப்புணர்ச்சி கொண்டிருந்தார் செய்குத்தம்பி. பிள்ளையவர்களின் விளம்பரத்தைக் கண்டதும் பொய்யும் புரட்டும் நிறைந்தது அவதானம்'' என்று வெளிப்படையாக நண்பர்களிடமும் சொல்லித் திரிந்தார்.

இவ்வவதானக் கலையைப் பற்றி ஆரம்பத்தில் தப்பான கருத்துக் கொண்டார் செய்குத்தம்பி. ''அருட்பா மருட்பா'' வாதப் போரிலும் இவர் வேதாசலத்தின் கருத்தை ஆதரித்து தர்க்கத்தை விடுத்து குதர்க்கம் பேசித் திரிந்தவர்.

"இறந்தார் எழுவார். வம்மின்! வம்மின்!! இறந்தவர்களை தகனஞ் செய்யாதீர்கள்; புதைத்து வையுங்கள். மீண்டும் உயிர் பெற்று வரச் செய்வேன்.'' என்றெல்லாம் நாவலர் காலத்தில் இராமலிங்கப் பரதேசி அறைகூவல் விட்டார். பரதேசியின் பித்தலாட்டத்தை அறியாத பல பொதுமக்கள் பிணங்களை மாட்டு வண்டிகளில் ஏற்றிக் கொண்டுவந்து பரதேசியிருந்த வளாகத்தில் ஒன்றுகூடிவிட்டார்கள். பல நாட்களாகப்

பொறுமையாகவிருந்த பொதுமக்கள் பிணம் எழுந்திராததைக் கண்டதும், பரதேசியை தாக்க முற்பட்டார்கள். அக்காலை பரதேசி கொல்லை வழியாகத் தப்பி ஓடி விட்டார். பரதேசியின் கூட்டமோ "இறந்தார் எழுவார்?" என்பதற்கு வேறு விளக்கம் கொடுத்து மக்களை ஏமாற்றி வழியனுப்பி வைத்தது. இவைகளையெல்லாம் பிள்ளையவர்கள் பல மேடைகளில் எடுத்துக்கூறி பரதேசியின் பாடல்கள் சிலவற்றை பிரித்து வைத்து விளக்கங்கள் கூறி, மாற்றாரின் குருவாகிய இராமலிங்கப் பரதேசியின் பொள்ளல்களையும், விதவைப் பெண்களையும், மற்றும் உலகத்தோரையும் ஏமாற்றிய விதத்தையும் புட்டுக்காட்டி கண்டனங்கள் தொடுப்பார்கள்.

இவைகள் யாவும் பரதேசியின் கூட்டத்தை சார்ந்தவர்களுக்கு பெரும் ஆத்திரத்தையும், அவமானத்தையும் காழ்ப்புணர்ச்சியையும் ஊட்டின.

"இராமலிங்க அடிகளார் கூற்று தவறன்று. "இறந்து ஆர் எழுவர்?" என அடிகளார் கேட்கின்றார். இறந்தார் எழுவர் என்று கூறவில்லை. சில விதவைகளின் அறியாச் செயலுக்காக அவரைக் குறை கூறலாமா? இறந்தவர் யார்தான் எழ முடியும். அவர் கூற்று உண்மை." இப்படியெல்லாம் குதர்க்கம் பேசுவதினால் கூட்டத்திலுள்ளோர் சிலேடையாக "குல்லா குதர்க்கம்" பேசுகிறது "குல்லா குதர்க்கம்" வருகிறது என்றெல்லாம் எள்ளி நகையாடுவார்கள்.

பிள்ளையவர்களின் சதாவதான விளம்பரத்தைக் கண்டதும் செய்குத்தம்பிக்கு ஆத்திரம் வந்தது. அதனால் தன் நண்பர்களிடத்தில் அதைப் பற்றி தூற்றித் திரிந்தார்.

இதே வேளையில் செய்குத்தம்பியின் சிற்றறிவுக்கும் ஆராய்ந்து திருப்தியடைவதற்கும் உதவியாக ஒரு விறலிவிடு தூதுப் பாட்டும் அகப்பட்டது. அதையும் அவர் நண்பர்களிடத்தில் கூறத் தவறவில்லை.

"வேசி ஒருத்தி பெண் மகவொன்றீன்றாள், சேடி ஒருத்தி குழவியை நீராட்டி, ஈரம் புலர்த்தி செய்நீர் புகட்டினாள். செய்நீர் மட்டுமல்ல, அத்துடன் வஞ்சகத் திருட்டும் மருட்டும், அவதானப் புரட்டும் தனம் புரட்டக் கபடச் சித்தினிப்பும் பொய்யும் கலந்து புகட்டினாள்' எனக் கூறுகிறது அந்த விறலிவிடுதூது.

இவ்வளவு தூரம் வெறுப்பும் விரக்தியும் கொண்ட செய்குத்தம்பி, பிள்ளையவர்கள் சதாவதானம் செய்யும் சிறப்பை நேரில் கண்டு அதிசயமும் அதிர்ச்சியும் அடைந்து மனம் தேறி, பல வருடங்களுக்குப் பின் பலமுறை ஒத்திகையின்பின் அவதானமும் செய்தார். ஆனால் பொதுமக்களோ இவரின் அவதானம் முழுப் பொய்யும் புரட்டும் நிறைந்ததெனக் கூறி இவரை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை.

சைவசித்தாந்த சபையினரால் விளம்பரப் பத்திரிகைகள் பரப்பப்பட்டன. விளம்பரத்தின் படி, பெப்பிரவரி மாதம் 24-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை, பல வித்துவான்களும் செந்தமிழ் பண்டித சிகாமணிகளும், சமஸ்கிருத பண்டிதர்களும், பல வல்லுனர்களும், பல பாஷைகளிலும் வித்தியா பட்டங்கள் பெற்றோரும், சட்ட நிபுணசிகாமணிகளும், கணித நிபுணர்களும், பாவலர்களும், பல சாஸ்திரிகள், புலவசிகாமணிகள், கற்றோர், மற்றோர் யாவரும் பகல் 12 மணியிலிருந்து வந்து கூடத் தொடங்கினர்.

அன்று எல்லோருடைய வாயிலும் இவ்வவதானத்தைப் பற்றிய பேச்சாயிருந்தது. சென்னையே விழாக்கோலம் பூண்டது. யாவர் முகத்திலும் மகிழ்ச்சியும் ஆர்வமும் தாண்டவமாடின. மத்தியானமே வீதிகளில் மக்கள் கூட்டம் சொரிந்து கொண்டிருந்தது,

பெப்ருவரி 24-ம் திகதி, சந்திரன் புதன் இராசியில் குருவின் நட்சத்திரத்தில் சுக்கிர கலையில் பகல் 12 மணி 18 நிமிடத்திற்கு வந்தான். அப்பொழுது பலர் மண்டபத்தில் சூழத் தொடங்கிவிட்டார்கள். (தொடரும்)

## மட்டுநகர் சோதிட மகாநாட்டில் சிந்திய முத்துக்கள்

திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் கைரேகை பதிவைக்கொண்டு அவரது ஆயுளைச் சரியாகக் குறிப்பிட்டேன். ஆனால் கிரகநிலைச் சோதிடர்கள் அவருக்கு 82 வயது ஆயுள் என குறித்ததாக அறிந்தேன்.

புலவர் வி. சித்திவிநாயகம்
கைரேகை நிபுணர்

# வளரும் விண்ணியல் 5

### ஆரியபட்டர்

இந்திய விண்ணூல் வல்லுனர்களுள் சிரோரத்தினமாய் விளங்கியவர் இவர். இவர் ஓர் பிராமண வம்சத்தைச் சேர்ந்தவர். கி.பி.476-ல் குஸுமபுரத்திலுள்ள அஸுகம் என்னும் கிராமத்தில் ஜனித்தவர். இக்கிராமம் தற்காலத்திலுள்ள பட்னாவுக்குச் சமீபமாகும். இவருக்குத் தேவராஜன் என்னும் ஓர் புதல்வர் உண்டு.

ஆரியபட்டர் சிறு பிராயத்திலேயே வானஜோதிகளை நன்கு ஆராயத் தொடங்கினார். இவ்வாறு ஆராய்ந்து வருங்காலத்தில் கிரகங்களில் நிலைக் (பிரத்தியட்சத்துக்) கும் முன்னர் தானறிந்த கோட்பாடுகளுக்கும் அதிகவித்தியாசமிருப்பதை அவதானித்தனர். இவ் வேறுபாட்டின் காரணத்தைத் தமக்குத் தெரிவிக்குமாறு கடவுளை வேண்டுவாராயினர். சிறிது காலஞ் சென்றபின் எல்லாம் வல்ல முழுமுதற் பரம்பொருளின் திருவருட் பேற்றால் 24-ம் வயதிற்கு முன் தசகீதி சூத்திரம் (Dasagiti Sutra) எனும் நூலை இயற்றினார். இவரது சிறந்த ஆரியபடீய சூத்திரமானது இவருக்குப்பின் ஆரிய பட்டீயம் என்று அழைக்கப்படலாயிற்று. இந்நூலானது இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் முதற்பகுதி 13 செய்யுட்களையும்; மற்றையது 108 செய்யுட்களையுமுடையது.

இதன் முதற் பகுதியான தசகீதி சூத்திரத்தில் கிரகங்களைப் பற்றியும், பூமியைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இரண்டாவது பகுதியாகிய அரியஷ்டோத்தரசத சூத்திரம், கணிதபாதம், காலக்கிரியபாதம், கோளபாதம் என மூன்று பிரிவுகளையுடையது. கணிதபாதம் கணித முறையையும், காலக்கிரியாபாதம் காலாநுக்கிரமணியையும், கோளபாதம் பூமியினதும் கிரகங்களினதும் உருவத்தைப் பற்றியுங் கூறுவனவாகும். இந்நூலுக்கு வியாக்கியானஞ் செய்தார் சூரியதேவ தீக்ஷிதர் கேரள நீலகண்ட சோமயாஜி என்னும் இருவராவர். சோமயாகஞ் செய்பவர் சோமயாஜி எனப்படுவர்.

அரியஷ்டோத்தரசதத்தில் கூறப்பட்ட முக்கியமான விஷயங்கள் வருமாறு:

பூமியின் உருவம்
ஆகாய வெளியில் பூமியின் நிலை
பூமியின் கவர்ச்சி
பூமியின் சுழற்சி
பூமியின் சுற்றோட்டம் [வடிவம்
பூமியும், கிரகங்களும் செல்லும் பாதையின்
புதனதும், சுக்கிரனதும் சுற்றோட்டத்தின்
பூமியின் பரப்பு [தன்மை
கடலைப்பற்றிய விண்ணூல் அபிப்பிராயம்
பவனத்தின் உயரம்
பூமியிலிருந்து சந்திரனின் தூரம்
வானஜோதிகளின் உதயாஸ்தமமும், பவனத்
விஷுவசலனம் [தின் தாக்கமும்

இனி இவையொவ்வொன்றையும் பற்றிக் கூறியிருப்பதை ஆராய்வோம்.

1. கோளபாதத்தின் ஆறாவது சூத்திரத்தில் பூமியானது வட்டவடிவுடையது என்றும் பதின்மூன்றாவது சூத்திரத்தில் அவ்வாறிருப்பதாற்றான் சூரியன் லங்காவில் உதயமாகும்போது யவகோடியில் நடுப்பகலாகவும், சித்தபுரத்தில் அஸ்தமனமாகவும், உரோமகத்தில் நடுநிசியாகவும் இருக்குமென்றும், கோளம் (Globe) என்னுஞ் சொல் உருண்டை என்னுஞ் சொல்லைக் குறிக்கும் என்றுங் கூறப்பட்டிருக்கிறது.

2. கோளபாதத்தின் பதினாறாவது சூத்திரத்தில் பூமியானது நட்சத்திரங்கள் பதித்த கம்பைகளால் அமைக்கப்பெற்ற கூண்டின் நடுவேயிருக்கிறது என்றும், வேறொரு சூத்திரத்தில் பூமியானது கிரகங்கள் செல்லும் வீதிகளால் சூழப்பெற்றிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. இவற்றை நோக்குமிடத்து பூமியானது ஆகாய வெளியில் அந்தரமாக இருக்கின்றதென்பது தெளிவாகிறது.

3. கோளபாதத்தின் ஆருவது சூத்திரத்தில் பூமியைச் சுற்றி இருக்கும் எல்லாப் பொருள்களும் பூமியின் மத்தியை நோக்கி வீழ்கின்றன என்று கூறப்பட்டுள்ளது. இதனையவதானிக்குமிடத்துப் பூமியினது ஆகர்ஷணசக்தியானது நன்கு தெளிவாகிறது.

4. தசகீதிபாதத்தின் மூன்ருவது சூத்திரத்தில் பூமியானது ஒரு மனிதனது சுவாசநேரத்தில் ஒரு கலை (Minute) அசைகிறதென்றும், கோளபாதத்தின் ஒன்பதாவது சூத்திரத்தில் ஒரு மனிதன் ஓடத்திற் செல்லும்பொழுது அவனுக்கு முன்பாகத் தோற்றப்படும் பொருள்கள் யாவும் அவனுக்குப் பிற்பக்கமாகச் செல்வதாகத் தோற்றுகிறது என்றும், கோளபாதத்தின் பத்தாவது சூத்திரத்தில் பிரவாஹ என்னுங் காற்ருனது முற்கூறப்பட்ட கூண்டையும், கிரகங்களையும் மேற்கு நோக்கி அசையுமாறு செய்கிறது என்றும் கூறப்பட்டிருக்கிறது. இவற்றை நோக்குமிடத்துப் பூமி சுழலுந் தன்மையுடையது என்பது தெளிவாகிறது.

5. கோளபாதத்தின் இரண்டாவது சூத்திரத்தில் ''சூரியன் கிராந்தி விருத்தத்திற் செல்கிறதென்றும்'', பூமியின் நிழலானது சூரியனுக்கப்பால் எதிர்ப்பக்கமாக விருக்கிறதென்றும், அந்நிழல் கிராந்தி விருத்தத்திலேயே சென்றுகொண்டிருக்கிறது என்றுங் கூறப்பட்டுள்ளது. இதனை நோக்குமிடத்து சூரியனும், பூமியினது நிழலும் கிராந்தி விருத்தத்திலேயே செல்கின்றனவாகத் தெரியவருகிறது. ஆனுல் இவ்விரண்டும் கிராந்தி விருத்தத்தில் செல்ல முடியாதாகையால் இவற்றுள் ஒன்று மத்தியிலும், மற்றையதே கிராந்தி விருத்தத்திலும் செல்கிறதென்பது நன்கு புலனுகிறது. விண்ணூற்கணித முறைப்படி பூமியின் நிழல் 143621 யோஜனை (ஒரு யோஜனை என்பது 7½ மைல் தூரமாகும்.) தூரமுள்ளதென்றுங் கூறப்பட்டிருக்கிறது. பூமியைப் பற்றிக் கூறுமிடத்துக் கோளபாதத்தின் ஆருவது சூத்திரத்தில் பூமி வானவெளியில் செல்கிறது என்றுங் கூறப்பட்டுள்ளது. இங்கு கூறப்பட்டனவற்றை நோக்குமிடத்து ஆரியபட்டர் பூமியின் உண்மையான (Real Revolution) சுற்ருேட்டத்தையும், சூரியனின் தோற்றமாத்திரையான (Appearent Revolution) சுற்ருேட்டத்தையும் கருதினரென்பது தெளிவாகும்.

6. காலக்கிரியாபாதத்தில் கிரகங்களின் கணிதமுறையைக் கூறுமிடத்து வானஜோதிகள் செல்லும் பாதையானது நீண்ட வட்டவடிவுடையது எனக் கூறியிருக்கிருர்.

7. காலக்கிரியாபாதத்தின் பதினைந்தாவது சூத்திரத்தில் நட்சத்திரங்களின் கீழ்ச் சனியும், அதன் கீழ் வியாழனும், அதன் கீழ் செவ்வாயும், அதன்கீழ் சூரியனும், அதன்கீழ்ச் சுக்கிரனும், அதன்கீழ்ப் புதனும், அதன்கீழ் சந்திரனுமாகத் தங்களுடைய வீதிகளில் சுற்றுகின்றன என்றும், இவ்வீதிகளுக்கு நடுவே பூமியானது ஓர் முளையாணிபோல் இருக்கிறது என்றுங் கூறப்பட்டிருக்கிறது. அடுத்த சூத்திரத்தில் இவ் வீதிகளின் வரிசைக் கிரகமானது ஒவ்வோர் கிரகங்களும் தங்கள் தங்கள் வீதிகளில் ஒருமுறை சுற்றி வருவதற்குச் செல்லுங் காலத்திற்குத் தக்கவாறு அதிக காலத்தைக் கொண்ட கிரகத்தி (சனி) லிருந்து முறையே குறிக்கப்பட்டன என்றும், இம் முறையைக் கொண்டே ஓரை (Horas) களும் கணக்கிடப்படுகின்றன என்றுங் கூறப்பட்டிருக்கிறது.

மேலும் தசகீதியில் எட்டாவது சூத்திரத்தில் பரிதிசங்கியை வரிசையாகக் கூறுமிடத்து சனி, வியாழன், செவ்வாய், சுக்கிரன் புதன், சூரியன் என்ற தலைகீழான முறையில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது, அத்துடன் சூரியனிலிருந்து புதனுஞ் சுக்கிரனும் விலகிச் செல்லும் அதிகதூரம் முறையே 26 பாகை 46 பாகை எனவும் சுக்கிரன் அடிக்கடி காணப்படுகிறதென்றும் புதன் அவ்வாறு திரிவதில்லையென்றுங் கூறப்பட்டுள்ளது. இவை யாவையும் நோக்குமிடத்து இந்திய விண்ணூலானது சூரிய மத்திய (Helio Centric) முறையை அடிப்படையாகக் கொண்டதென்பதும் புலனுகிறது.

(வளரும்)

**முக்கியகுறிப்பு:**

சோதிடமலரில் வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக் களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

மீன்பாடும் தேன் நாடாம்

# மட்டுநகர் சோதிட மகாநாட்டில்

## – ஒரு கண்ணோட்டம் –

அருள்வேலழகன்

**சர்ச்சைகளும் மகாநாடுகளும்....!**

''வேதாகம சோதிட பூஷணம்'' சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் ''திருக்கணித பஞ்சாங்கத்தின்'' வரலாற்றை ஆதாரபூர்வமான, புள்ளி விபரங்களுடன் தொடர்ந்தும் விளக்கினார். சபையிலுள்ள பண்டிதர்கள், சோதிடமேதைகள் குருக்களின் உரையை அமைதியாக ஆவலுடன் செவிமடுத்துக்கொண்டிருந்தனர். ''சோதிடபூஷணம்'' தொடர்ந்தும் தமது உரையில்,

''திருக்கணித பஞ்சாங்கம்'' இந்தியாவில் வெளிடப்பட்ட காலத்தில்; இந்தியாவில் மலையாளம், சென்னை, மைசூர், பூனா, ஆந்திரப்பிரதேசம் போன்ற பல இடங்களிலும், தென் இலங்கையிலும், அவ்வவ் இடங்களுக்குரிய மொழிகளில் ''திருக்கணித பஞ்சாங்கம்'' வெளியிடப்பட்டு பவனிவரத் தொடங்கியது. தென் இலங்கையில் சிங்கள மொழியில், திருக்கணித முறைப்படி வெளிவரும் பஞ்சாங்கங்களான 'இரநம', 'ஏப்பா' ஆகிய பஞ்சாங்கங்கள் இன்றும் வெளியிடப்படுவது யாவரும் அறிந்ததே.

இப்படித் ''திருக்கணித பஞ்சாங்கம்'' வெளிவந்து செல்வாக்கைப் பெறத் தொடங்கியதும், ''வாக்கிய பஞ்சாங்கம்'' வெளியிட்டு வந்த வாக்கிய கணிதர்களுக்கும், அதைக் கைகொள்பவர்களுக்கும், புதிய திருக்கணித பஞ்சாங்க கணிதர்களுக்கும், அதைக் கைக் கைக்கொள்பவர்களுக்குமிடையில் சிறு சிறு சர்ச்சைகள் தலைதூக்க ஆரம்பித்தன. இச்சர்ச்சைகளைத் தீர்த்து, பொது மக்கள் உண்மையைப் புரியவைக்கும் முகமாக, நாட்டின் பல பாகங்களிலும் பல மகாநாடுகளும், கருத்தரங்கு ஆய்வரங்குகளும் ஆங்காங்கே நடைபெற்றன.

**கல்லடி ஆலயத்தில் திருக்கணித முறை ஏற்பு....!**

இப்படியான பஞ்சாங்க மகாநாடுகளில், இந்தியாவில் உள்ளகல்லடி ஆலயத்தில் ஒரு கருத்தரங்கும், மகாநாடும் நடைபெற்றது. இந்த மகாநாட்டில் திருக்கணித பஞ்சாங்க கணிதர்கள், அதைக் கைக் கொள்பவர்கள், வாக்கிய பஞ்சாங்க கணிதர்கள், அதை அனுசரிப்போர் என்ற ரீதியில் ஒரு பெரும் பிரிவினர் கூடினர். நீண்ட பெரிய அம் மகாநாட்டில் பஞ்சாங்க கணிப்பு முறைபற்றி காரசாரமான விவாதங்கள் நடத்தப் தப்பட்டன.

இந்த நீண்ட மகா நாட்டின் முடிவில், அதில் கலந்து கொண்ட பண்டிதர்கள், நல்லறிஞர்கள், கணிதர்கள் அனைவரும் ஒரே முகமாக திருக்கணித பஞ்சாங்க கணிப்பு முறையே சரியானது என ஏகோபித்து ஏற்றுக் கொண்டனர். திருக்கணித பஞ்சாங்கத்திற்கு ஒரு மதிப்புரையும் வழங்கினர்.

*1934*-ம் ஆண்டில் மைசூரில் நடைபெற்ற வானசாஸ்திர மகாநாட்டில் உலகப் பேரறிஞர்

கூடிப் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. மைசூர் வானசாஸ்திர மகாநாட்டில், அறிஞர் பெருமக்களால் எடுக்கப்பட்ட அத்தனை தீர்மானங்களிலும் திருக்கணித பஞ்சாங்க கணிதமே சரியானது என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டது. இதில் முக்கியமாக 'திதி' 'நட்சத்திரம்' இவைகளின் விருத்தி க்ஷய நாழிகைகளின் அளவை (Maximum and minimum duration) வான சாஸ்திர கணிதப்பிரமாணம் கொண்டே நிச்சயிக்கப்பட வேண்டும் என்ற இத் தீர்மானமே முக்கியமானது.

## கைப் புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா....?

இலங்கையைப் பொறுத்தளவில் திருக்கணித பஞ்சாங்க கணிப்பு முறையா? வாக்கிய பஞ்சாங்க கணிப்பு முறையா சரியானது? என்ற சர்ச்சைகள் இன்றுவரை தலைவிரித்துத் தாண்டவமாடுவதை சோதிடப் பெருமக்கள் அறிஞப் பெருமக்கள் அறியாததொன்றல்ல. இருந்தும் இலங்கையில் பல அறிஞப் பெருமக்கள், சோதிடப் பெருமக்கள், கல்விமான்கள் 'திருக்கணித பஞ்சாங்க' கணிப்பே கணித சுத்தமானது, சோதிடக் கலைக்கு ஏற்றது; சரியான பலாபலன்களைக் கொடுக்கக் கூடியது என்று ஒரே முகமாகக் கூறியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் இலங்கை சோதிட ஆய்வுமன்றம் இதுபற்றித் தீவிரமான ஆய்வு நடத்தியது. இறுதியில் திருக்கணித பஞ்சாங்க கணிப்புத்தான் சரியானது என்ற முடிவுக்கு வந்தது. இந்த முடிவை திட்டவட்டமாக வெளியிட்டது.

## ஏன் இந்தச் சர்ச்சை....?

சில பஞ்சாங்க கணிதர்கள் கணிதத்திற்குரிய ஆதார நூல்களில் வலியுறுத்தப்பட்ட திருத்தங்களை காலத்திற்கேற்ப கைக்கொள்ளத்தவறியதே இச்சர்ச்சைகளுக்குக் காரணமாகும். இதுபற்றி 1978-ம் ஆண்டு ஆடி, புரட்டாதி மாதங்களிலும், 1979-ம் ஆண்டு ஆனி மாதம் 1980-ம் ஆண்டு பங்குனி மாதம் வெளியான ''சோதிடமலர்'' களில் போதிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் கூட இன்றும் 'வாக்கிய' — 'திருக்கணித' பஞ்சாங்கங்களுக்கிடையிலுள்ள வேறுபாடுகள் என்ன? என்ற கேள்விக்குறி எழுப்பியவண்ணமிருக்கிறார்கள்...?

## வாக்கிய கணித வேறுபாடுகள்

சூரியன், சந்திரன், பூமி ஆகியவை தமது ஈர்ப்புச் சக்தியால் ஒன்றை ஒன்று இழுக்கின்றன. பூமியின் உபக் கிரகமான சந்திரன் பூமியைச் சுற்றிவரும் போது, மேற்கூறிய ஈர்ப்புச் சக்திகளால் அதன் பாதையின் உருவம் அவ்வப்போது மாறுதல் அடைகின்றது. இந்தநிலையில் மற்றைய கிரகங்களின் ஈர்ப்புச் சக்திகளும் சேர அவ்வப்போது வித்தியாசமாகி சந்திரனுடைய கதியில் மாற்றம் உண்டாவது தவிர்க்க முடியாததாகும்.

வாக்கிய கணிதம் ஏற்பட்டகாலத்தில் நமது முன்னோர் கண்டுபிடிக்காத காரணத்தாலோ, ஏதோ இவைகளை வாக்கியகணிதத்தில் சேர்க்காது விட்டுள்ளனர். ஆனால் திருக்கணித பஞ் பஞ்சாங்கத்தில் இவைகள் சேர்க்கப்பட்டு கணிக்கப்படுகின்றன. இதன் காரணமாகவே நட்சத்திரம், திதி, யோகம் முதலியவற்றில் திருக்கணிதத்திற்கும், வாக்கியத்திற்குமிடையில் வித்தியாசம், வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பூமி, சந்திரன், சூரியன் ஆகியவை ஒரே நேரில் வரும் பொழுது உண்டாகும் அமாவாசை, பூரணை நெருங்கிய நாட்களில் இந்த வேறுபாடுகள் சிறிதாகவும், அட்டமி, நவமிகளை நெருங்கும் காலத்தில் சுமார் 6 அல்லது 6½ மணித்தியால வித்தியாசமும் ஏற்படுகின்றன. இதன் காரணமாகவே திருக்கணிதம் — வாக்கியத்திற்கிடையில் விரதாதிகளில் வித்தியாசங்கள் வருகின்றன. இவைகளை சோதிடர்களும். சமய தேவஸ்தானங்களும் கவனத்திற்கு எடுத்து சரியான காலங்களில், பொது மக்கள் விரதாதிகளை அனுஷ்டிக்க வழி வகுக்கவேண்டும். இந்த வழியிலும் விரத காலங்களை ''திருக்கணித பஞ்சாங்கமே'' சரியான, உரிய காலத்தில் வெளியிடுவதை யாவரும் ஒப்புக் கொண்டுள்ளார்கள். என்பதை நான் கூற வேண்டியதில்லை.

## கிரகண காலங்களில்....!

கிரகணம் சம்பவிக்கும் காலங்களில் அமாந்தம், பறுவாந்தம் முதலியன வாக்கிய கணித பஞ்சாங்கங்களில் வேறுபட்டிருந்தும் கூட, வாக்கிய கணித பஞ்சாங்கங்களில் கிரகண நேரங்கள் மட்டும் சரியாக வெளியிடப்படுகிறது. என்றால், அதன் உண்மை என்ன? வாக்கிய கணிதர்கள் தமது வாக்கிய பஞ்சாங்கத்தில் குறிக்கப்பட்ட அமாந்தம், பறுவாந்தமுடிவுகளை வைத்து கிர

ணம் குறித்தால் கண்டிப்பாக அது பிழையாகும். இதை எந்தக்குழந்தைகூடத் திட்டவட்டமாகக் கூறும். ஆகவே வாக்கிய பஞ்சாங்க கணிதர் களின் அமாந்தம் — பறுவாந்த முடிவுகள் அவர் களின் கிரகணத்தின் சரியான நேரத்தைக் கொடுக்கமுடியாது.

அப்படியென்றால் பொதுமக்கள் இந்த உண்மையை அடிப்படையாக வைத்து சிந்திக்க, ஆய்வுசெய்யக் கடமைப்பட்டுள்ளனர். சரியாகச் சிந்தித்து உண்மை ஆராய்ந்தால், வாக்கிய கணி தர்கள் கிரகணவிடயத்தில், 'திருக்கணிதத்தையே' கையாளுகின்றார்கள் என்ற உண்மை பளிச்சிடு கிறது. இந்த உண்மையை மறைக்கவோ, மறுக் கவோ அவர்களால் முடியாது. 'வெள்ளியால் பூண் போட்டாலும் வெள்ளரிக்காய் பழுத்தால் அது வெடிக்கத்தான் செய்யும். வாக்கிய கணிதர் கள் இந்த உண்மைக்கு எவ்வளவுதான் திரை போட்டு மறைக்க முயன்றாலும் முடியாது. இன்றைய இளைய சமுதாயம், கல்வியால், ஞானத் தால், விஞ்ஞான ஆய்வால் சிறந்த சமுதாயம் என்பதையாவது வாக்கிய கணிதர்கள் நினைவில் கொள்ளவேண்டும் என்பது எனது தாழ்மையான கருத்து.

### புத சந்தரண காலம்

புத சந்தரணம் நிகழ்ந்த காலங்களில் (புத சந்தரணம் என்பது புதன் என்னும் கிரகம் சூரிய விம்பத்தைக் கடந்து குறுக்கே செல்வது போன்ற ஓர் அழகான காட்சி) இந்த இடத்திற்கு எமது நேயர்களின் கவனத்தை செலுத்த வைக்க வேண் டிய ஒரு நிர்ப்பந்தம் இப்பொழுது எனக்கு உண்டு. இங்கு அனைவரும் சிந்தனையைக் கூர்மை யாக்க வேண்டியது அவசியம்.

திருக்கணிதப்படி, புத சந்தரணம் நிகழ்ந்த தினத்தில் வாக்கிய பஞ்சாங்கத்தில் சூரியன் ஒரு நட்சத்திர பாதத்திலும் புதன் வேறு பாதத்திலும் இருந்ததைப் பஞ்சாங்க பாவனையாளர் கண்டிப் பாக அவதானித்திருப்பார்கள். இருந்தும் அன்று சந்தரணம் நிகழ்ந்தது: உண்மையில் அவை யிரண்டும் ஒரே நட்சத்திரபாதத்தில் இருந்தாலே யன்றி சந்தரணம் நிகழமுடியாது. இந்த உண்மையை இந்த நாட்டு சோதிடப் பெருமக்கள் அவதானித்திருக்கலாம். வாக்கிய பஞ்சாங்கத்தின் தவறையும் உணர்ந்திருக்கலாம்.

### தவறுகள் ஏன் ஏற்படுகின்றன....?

மேற்கூறியது போன்று திதி, நட்சத்திரங் கள், வித்தியாசப்படுவதின் காரணமாகவே மாத, வருடப்பிறப்பு, சிவராத்திரி, நவராத்திரி, தீபா வளி போன்ற இன்னோரன்ன அம்சங்களிலும் தவறுகள் தாராளமாக ஏற்படுகின்றன. இப்படி தவறுகள் பஞ்சாங்கத்திற்குப் பஞ்சாங்கம் வேறு பாடுகள் இருப்பதினால் சைவப் பெருமக்களுக்கு எதைக்கொள்வது, எதைத் தவிர்ப்பது என்ற பாரிய தலையிடி ஏற்பட்டுக் கலக்குகிறது.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டே 1952 ஆம் ஆண்டில் அன்றைய பாரதப் பிரதமர் அமரர் நேருஜீயினால் பஞ்சாங்க சீர்திருத்த சபை ஒன்று நியமிக்கப்பட்டது. அச்சபை பல பஞ் சாங்கங்களையும் அழைப்பித்து அலசி ஆராய்ச்சி யைத் தொடர்ந்து, அச்சபையினர் குறிப்பிட்ட சில பஞ்சாங்கங்களையே சரியான சுத்தமான கணிதம் எனத் தேர்ந்தெடுத்தனர். அதில் ''திருக்கணித பஞ்சாங்கமும்'' முக்கியமானதாகும். அச்சபையினர் தமது அறிக்கையைப் பெரிய புத்தகருபத்தில் வெளியிட்டனர்.

### ராஷ்டிரிய பஞ்சாங்கங்கள்

பஞ்சாங்க சீர்திருத்த சபையினரினது அறிக்கையைத் தொடர்ந்தும், இந்திய அரசாங் கத்தின் ஆதரவில் ஆண்டு தோறும் 'ராஷ்டிரீய பஞ்சாங்கம்' என்னும் பஞ்சாங்கம் 12 மொழி களில் வெளியாகிக்கொண்டிருக்கின்றது. அப்பஞ் சாங்கங்கள் திருக்கணித பஞ்சாங்க கணிதத்தையே கொண்டிருக்கின்றன. வாக்கிய கணிதம் ரிஷி கள், முனிவர்களால் ஆக்கப்பட்டது — வேதாக மப்படி கணிக்கப்படுவது — அதில் பிழையேற்பட மாட்டாது என்ற குருட்டு நம்பிக்கையை மக் களுக்குக் கூறிவருகிறார்கள். இன்ன தினத்தில் தான் இன்ன விரதம் வருகின்றது என ரிஷிகள் யாராவது கூறியிருக்கிறார்களா? வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளதா? இல்லை. எந்த தினத்தில் என்ன விரதம் வருகிறது என்பதைக் கணித்துத் தான் அறியவேண்டும். உதாரணமாக அமா வாசை விரதத்தை எடுத்துக் கொண்டால் குறித்த தினத்தில் அமாவாசை எத்தனை நாழிகையில் ஆரம்பித்து எத்தனை நாழிகையில் முடிகிறது என்பதை நுட்பமாகக் கணித்து அறிந்த பின்னரே எத்தினத்தில் விரதம் அனுஷ்டிக்கவேண்டும்

(32-ம் பக்கம் பார்க்க)

‘ஆனந்தபைரவி’

# அன்னையைக் கண்டேன் 24



## அழியாப் புகழ் வளர்க்கும் கொழும்புநகர் மாரியம்மன்

இலங்கைத் தலைநகர மக்களுக்கு இணையில்லாத் துணையாக எங்கள் அன்னை அருளாட்சி வழங்கி வருவது கொட்டாஞ்சேனைப் பகுதியில் ஆகும். சுமார் ஒருவருடகாலத்திற்கு முன்பே கொட்டாஞ்சேனை முத்துமாரி அம்மனின் குளிர் கருணைப்புகழை எழுத விரும்பினோம். ஒருதடவை கொழும்புக்கு போயிருந்தபோது அன்னையின் ஆலயத்திற்கும் போயிருந்தோம். ஆனால் பரபரப்பான நகரச் சூழலில் பக்தகோடிகளின் நிறைந்த கூட்டத்திற்குள் அன்னையைத் தரிசித்து வணங்க முடிந்ததே தவிர ஆலய வரலாற்றையோ ஏனைய விபரங்களைத் திரட்டவோ முடியவில்லை.

அண்மையில் மஹாகும்பாபிஷேகம் நடந்து முடிந்தபின் மண்டலாபிஷேகம் நடந்துகொண்டிருந்த ஒரு தினத்திலேயே மீண்டும் அம்பிகையை தரிசிக்கும்பேறு கிடைத்தது.

எப்போதும் ஜேஜே என்று ஜனத்திரள் தான். இயந்திர கதியில் இயங்கும் கொழும்பு நகரின் கண்ணே — கொட்டாஞ்சேனைப் பகுதியில் அமைந்திருக்கும் ஆலயமல்லவா? அதுவும் அம்பிகையின் அருள்வீடு என்றால் கேட்கவேண்டுமா? இன, மத, மொழி வேறுபாடின்றிச் சகல விதமான மக்களும் சாரி சாரியாக வந்துகொண்டிருக்கிறார்கள்.

புத்தம் புதிதாக வண்ணக் கலவைகளுடன் நெடிதுயர்ந்து காட்சிதரும் அழகிய கோபுரத்தின் சிற்ப வேலைப்பாடுகளை நின்று இரசிப்பதற்கு முடியாத சூழ்நிலை, உள்ளே நுழைகிறோம். கிழக்கு நோக்கிய கோயில் மூலஸ்தானத்திலேயே மங்கலமாகக் காட்சிதருகிறாள் மஹாமாரி. சர்வாலங்கார பூஷிதையாக அவளைக்கண்டு புளகமடைகிறோம். அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நபன மண்டபம் இவற்றோடு இணைந்ததாக ஒரு மிகச் சிறிய உள்வீதி.

ஸ்நபனமண்டபத்திலே இருபுறமும் சிறிய சந்நிதானங்களில் பிள்ளையாரும் பழநியாண்டவரும் வீற்றிருக்க, சற்று முன்னே சிம்மம், பலிபீடம் அமைந்திருக்கிறது, பின்புறத்திலே சிறிய மடங்களிலே பரிவாரதேவர்கள் அடுத்தடுத்துக் காட்சி தருகின்றனர். விநாயகர் மஹாவிஷ்ணு, கண்ணகி சிவன் - பார்வதி, சுப்பிரமணியர் ஆகியோர் பின்புறத்திலும், வடக்குப்புற மண்டபத்திலே, நடேசர், மஹாமாரி - உற்சவமூர்த்தி ஆகியோரும் தகதகத்து ஒளிவீசிக்கொண்டிருக்கின்றனர்.

வெளிவீதி என்பது இல்லை. முன்புற வாசலோடு அலுவலகம், மடைப்பள்ளி என்பன தனியாக இருப்பதோடு, காளிதேவிக்கு ஒரு தனிக் கோயில் ஒரு தனியான அர்ச்சகருடன் அமைந்திருக்கிறது. சுவரிலேயே அமைந்த பென்னம் பெரிய சிலை அங்கிகளுடன் காணப்படுகிறது. கல்லில் வடித்த இன்னொரு காளியின் வடிவம் அதி பயங்கரரூபத்துடன் காணப்படுகிறது.

உள்வீதி வாசலருகே ஸ்ரீ ரங்கநாதமூர்த்தியின் பெரிய வடிவமொன்றும், இடது புறத்திலே தனியாக பைரவர், நாகதம்பிரான், சனீஸ்வரன் நவக்ரகம் ஆகியோரின் சந்நிதிகளும் காட்சி தருகின்றன.

சுவர்களிலே லக்ஷ்மி, துர்க்கை, சரஸ்வதி, சிவன் -பார்வதி, வெங்கிடாசலபதி, விநாயகர், முருகன் ஆகியோரின் அழகிய வண்ணப்படங்கள் பெரிதாக எழுதப்பட்டிருக்கின்றன.

திருவிளங்க நகரத்தார் என்ற வணிக - வைசியச் செட்டியார் சமூகத்தினரால் பரிபாலிக்கப்பட்டு வரும் இவ்வாலயத்துக்கு நீண்டகாலச்சரித்திரப் பின்னணி உண்டென அறிகிறோம்.

தென்னிந்தியாவிலே கோவில்பட்டி தாலுகாவிலே எருக்கங்குடி என்ற கிராமத்திலே அமைந்துள்ள அம்மன் கோவில் நிலத்தினிலே மிருத்சங்கிரகணம் செய்து மண் எடுத்துவரப்பட்டது. அவ்வாறு 1856-ம் ஆண்டிலே முதன்முதலில் ஸ்தாபிக்கப்பெற்றதுதான் கொட்டாஞ்சேனை மாரியம்மன் தேவஸ்தானம்.

இதன்பின் 1954-ம் ஆண்டு வைகாசி மாதம் அஸ்த நட்சத்திரத்திலே ஒரு கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. இதன்பின் 28 வருடங்களுக்குப்பின் நமசிவாயம் மனோகரன் என்ற அன்பரின் திருப்பணியினால் அம்பிகை ராஜகோபுரம் - விமானம் இவற்றோடு புதுக்கோலம் கொள்ளத் திருவுளம் கொண்டாள்.

1981-ம் ஆண்டு ஆனிமாதம் பாலஸ்தாபனம் செய்யப்பெற்றது. திருப்பணி வேலைகள் குறைவின்றி நிகழ்ந்தன. ஸ்நபன மண்டபமும், சுற்றுப் பிரகாரச் சுவரும் பளிங்குக்கல் பதிக்கப் பெற்றுள்ளது,

இதன்பின் கடந்த 31-3-82 புதன்கிழமை கும்பாபிஷேகம் நடந்தது; தொடர்ந்து நாற்பத்தைந்துநாள் மண்டலாபிஷேகம் நிகழ்ந்துவந்தது.

நவராத்திரி, மானம்பூ என்பன இவ்வாலயத்தில் மிக விசேட தினங்களாகும். வருடத்தில் இரு தடவை அம்பிகை வெளியே புறப்பட்டு நகர் வலம்வருவது கண்கொள்ளாக்காட்சி, புத்தம் புதுக்கோலத்தில் புகழ் பொங்க வீற்றிருந்து பூக்கும் அருள்முகம் காட்டிநிற்கும் பூவையைத் தரிசித்த புண்ணியத்தோடு பொங்கும் மனத்தினராய்ப் புறப்படுகிறோம். அடுத்தமுறை அம்பிகை எங்கிருந்து அழைப்பாளோ?

---

மட்டுநகர்........

(30-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று நிர்ணயிக்கப்படுகிறது. ஆகமங்களில் நிர்ணயங்கள் மட்டுமே சொல்லப்படுகிறது. எனவே கணிதம் வானசாஸ்திர அடிப்படையில் கணிக்கப்பட வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

இப்படியாகப் பஞ்சாங்க வரலாறு பரந்திருக்கும். இன்றைய காலகட்டத்தில், பஞ்சாங்க கணிதர்கள் இன்றைய இளம் சந்ததியினரின் கூர்மையான அறிவையும், ஆற்றலையும் திரை போட்டு மறைத்து விட முடியாது. அவர்கள் பஞ்சாங்கத்தில் கணித சுத்தத்தை கண்டெடுத்து சோதிடத்தின் சரியான பலாபலன்களையும் பெறத்தவற மாட்டார்கள் என்று "குருக்கள்" அடித்துக் கூறினர். (வளரும்)

# நல்லை முருகனின் தோற்றம் கண்டேன்

செல்வி. தேன்மொழி அருளம்பலம்

வள்ளி யுள்ளம் கொள்ளைகொண்ட
கள்வ னவன் வேலழகன்
உள்ளம் புகுந் தானடி — மயிலே
துள்ளி மிருள் துடைத்தானடி!

கதிரமலை உச்சி சென்றேன்
கதிரொளி வடிவைக் கண்டேன்
கதிகலங்கி பேனே னடி — மயிலே
மதிவலுவை தந்தா னடி!

தெள்ளி தமிழ் திருமொழியன்
தேன்மொழி தெய்வ மவன்
வள்ள லவன் முருகனடி — மயிலே
அருள்மொழியே பகர்ந் தானடி!

பாங்கரிலே பூங்கொடி யாள்
பொங்கு தமிழ் கயல்விழியாள்
ஓங்காரம் ஒலித் தாரடி — மயிலே
தமிழ் ரீங்காரம் செய்ததடி!

அருளொளி புவன்ம் மீதே
அழித்திட ஆண வத்தை
பெருநிலை கண்டே னடி — மயிலே
முருகனின் தோற்றம் கண்டேன்!

கல்வயல்,
சாவகச்சேரி.

எழுதுவது நல்லது; சிந்திப்பது அதை விட மேலானது; மதிநுட்பம் மிகவும் நல்லது; பொறுமை அதைவிட மேலானது.

— சிந்தனைத்தேன்

# ஆய்வு மன்றம்

சின்னையா சுந்தரலிங்கம்,
பருத்தித்துறை வீதி, மயிலிட்டி.

காலசர்ப்ப யோகம் உங்களுக்கு இல்லை. திக்குவீரிய பலம், நீசபங்க இராசயோகங்கள் முதலாய பல சுப யோகங்கள் இருக்கின்றன. கூடிய விரைவில் உமது எண்ணங்கள் எல்லாம் நிறைவு பெறக்கூடும்.

கந்தையா கிருஷ்ணபிள்ளை - தியத்தலாவ

அதிகாரம், இஷ்டமான வாகனம், பிரயாணம், போன இடங்களில் பொருள் வரவு, தேவ குரு தரிசனம், பல காரியானுகூலங்கள், பயம், காரியக்கேடு, பொருள் நட்டம், சிரமம், அவ மிருத்துப் பயம் ஆதியன கலந்து நிகழும்.

சு. சுப்பிரமணியம்,
'வளர்மதி' முள்ளானை, இளவாலை.

உயர் கல்வியுடன் உத்தியோகமும் பெற்று நல்ல எதிர்காலமும் உமக்கு வரும். "ஊக்கமது கைவிடேல்"

ந. மனோகரன், 55, ஆடியபாதம் றேட். நல்லூர்.

சோதிடர்களின் அபிப்பிராயத்தில் தவறில்லை என்பதும் உமக்குத் தெரிந்ததுதானே! ஏழரை முடிவும், சந்திரன் மகாதசையும் அதைத் தொடர்ந்து வரும் செவ்வாய் மகாதசையும் உமக்கு யோக காலமாக அமையும் தானே!

சா. சோமதேவ சர்மா,
அரசகேசரிப் பிள்ளையார் கோவில் நீர்வேலி.

பல திடீர் நெருக்கடிகளைச் சமாளித்துவரும் தாங்கள், செய்துவரும் தேவஊழியம் தான் கை கொடுத்து உதவுகின்றது என்பதை மறவாதிருந் தால் உங்கள் எண்ணங்கள் எல்லாம் விரைவில் நிறைவு பெற அந்தப் பிள்ளையாரே துணைபுரிவார் தானே!

இ. இராசன், சுட்டுவன், தெல்லிப்பழை.

விண்ணப்பத்தில் பிறந்த ஆண்டு - மாதம் திகதி - நேரம் - பிறந்த இடம் என்பன குறிப்பி டப்பட்டிருந்தால் தானே ஆய்வு மன்றம் பலன் கூறலாம்;

செல்வி. சி. பரமலோஜினி,
புலோலி - பருத்தித்துறை

8-ல் செவ்வாய் இருந்தால் விவாகம் தாமதித்து நடக்கும். விவாகத்தில் சிற்சில சச்சரவுகள் நடக்கும். அபிப்பிராய பேதங்கள் உண்டாகும். துணைவர் கடும் செலவாளியாக இருப்பார். குறிப்பிட்ட நாலுபேர் கதைக்கக் கூடியமுறையிலும் இருப்பார் என்று புகழ்பெற்ற சோதிட மேதைகள் சொல்லியுள்ளார்கள். "விரதாதிகளால் எவ்வகைத் தோஷங்களையும் சாந்தியாக்கலாம்" என்றும் சோதிடம் வலியுறுத்தியுள்ளது. குறிப்பிட்ட எல்லா விரத நோன்புகளையும் பக்தி சிரத்தையுடன் அனுட்டித்து வரவும். விரைவில் நற்பலனடைவீர்,

அழகையா மங்கையற்கரசி, மண்டூர்.

இலக்கினத்தில் இராகு இருக்க - இலக்கினாதிபன் பாபர் மத்தியம் பெறுவதும் 7-ல் கேது இருக்க 7-ம் அதிபன் நீசம் பெறுவதும் 2-ல் சனி இருக்க 2-ம் இடம் சூரியன் திருஷ்டி பெறுவதும் வேறும் பல அம்சங்களினாலும் நீர் குறிப்பிட்ட தோல்விகளை அடைய நேரிட்டது. செவ்வாய்-கேதுப் பிரீதியுடன் சுப்பிரமணியரையும், விநாயகரையும் பக்திசிரத்தையுடன் வழிபட்டு வருவீராயின் விரைவில் உமது எண்ணங்கள் கைகூட வழியுண்டாகும்.

வே. மனோகரன் - பெரியகல்லாறு

இலக்கினச் செவ்வாயும் 2-ல் சனி இராகுவும் நீங்கள் குறிப்பிட்ட கடந்தகால நிகழ்வுகளுக்குக் காரணமாயின. பிடிவாதமான போக்கைச் சற்று தளர்த்தி, பக்திசிரத்தையுடன் குலதெய்வ வழி பாடுகளைக் கிரமமாகச் செய்துவரின் கூடிய விரைவில் நன்மையடைவீர்.

வத்சலாதேவி - துரைராசா,
நீதிமன்ற வீதி, மல்லாகம்.

கணக்கியல் துறையில் முன்னேற்றம் உண்டாகும். சங்கீத அழகியல் கலைத்துறையும் முன்னேற்றம் தரலாம். விரைவில் மனம்போல் மாங்கல்யமும் கிடைக்கும்.

**கு. ஆனந்தகுமார்,**
*31/16* ஸ்ரீ மா போதி ரோட், தெகிவளை.

'விரலுக்குத் தக்கது வீக்கம்' என்பது சரி தானே! இத் தசாபுக்தியில் உங்களுக்கு உத்தி யோக உயர்ச்சி கிடைக்கவேண்டியது நியதியானு லும் உயர்ச்சி பெறும் மரியாதையையாவது மற் றவர்கள் கொடுத்து வருவார்களே. கஜகேசரி யோகமும் உண்டுதான். இனத்தின் கஷ்டம் உங்களையும் தொடருவதின் அர்த்தம் விளங்கும் தானே.

**தாமோதரம்பிள்ளை புஷ்பராணி, அல்வாய் மேற்கு.**

புத்திரபலன் குறைவு. நாகதோஷம் உண்டு என்றும் கூறுவர். உரிய விரதாதிகளைப் பக்தியு டன் அனுஷ்டிப்பதால் புத்திரர் உண்டாக இட முண்டு. துணைவருக்காகச் செலவுகள் செய்ய வேண்டும் நிலை உமக்கு எப்போதும் உண்டு. முயன்றால் அந்நியர் தேசப் பொருள் வருவாயும் கிடைக்கும்.

**ந. சக்திரூபன், நீர்வேலி தெற்கு நீர்வேலி.**

சுக்கிரன் மகாதசையில் அரசாங்க/தனியார் துறையில் இயந்திர - மருந்து - எண்ணெய் - விளம் பர - வியாபார - நீதித்துறை முதலிய இவற்றுடன் சம்பந்தப்பட்ட ஏதாவதொரு துறையில் வேலை பெறுவீர்.

**நா. சின்னத்துரை, பிரதான வீதி வாழைச்சேனை.**

ரோகஸ்தானத்தில் சந்திரனும், கேதுவும் இருக்க - இவர்களைச் சனியும் ராகுவும் திருஷ்டி செய்யவும் தொய்வு (Asthma) நோயினுல் பீடிக் கப்பட வேண்டியதாயிற்று. ராகு தசை முடிந்து குருதசை நிகழ எல்லாக் கஷ்டங்களும் உமக்கு படிப்படியாகத் தீர வழி பிறக்கலாம்.

**N. K. இரத்தினம், ஹற்றன்**

மிகுந்த சிரமத்துடன் முயற்சி எடுப்பின் உங்களுக்கு இந்தியப் பிரஜா உரிமை கிடைக்கும். போகவும் முடியும்.

---

குறிப்பு:- ஆய்வு மன்றப் பகுதிக்கு விண்ணப்பம் செய்வோர் பிறந்த திகதி நேரம் (மணி. நிமி) இரவு பகல் முதலியவற்றை விளக்கமாகக் குறிப்பிட வேண்டும். உங்கள் கஷ்டங்கள் பிரச்சினை களைத் தெளிவாகத் தனியாக எழுதி இப்படிவத்துடன் இணைத்து 'சோதிடமலர்' ஆய்வு மன்றம், திருக்கணித நிலையம், மட்டுவில், சாவகச்சேரி. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக் கவும். விண்ணப்பப் படிவம் இணைக்கப்படாத கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் கிடைத்த ஒழுங்கின்படியே பதிலளிக்கப்படும்.

தாமதமின்றிக் கடிதமூலம் பதில் பெற விரும்புபவர்கள் மேற்கூறிய விபரங்களுடன் ரூபா 15-00 க்கு போஸ்டல் ஆடரும், முத்திரை என்வலப்பும் அனுப்பிப் பெற்றுக்கொள்க.

---

## விண்ணப்பப் படிவம்

பெயர்: ..............................................................

விலாசம்: ..............................................................

பிறந்த திகதி: ஆங்கிலம் ..............................................

தமிழ் ..............................................

,, நேரம்: ..............................................

,, இடம்: ..............................................

கிரகநிலை

.................... தசை இருப்பு

வரு........மா.........நாள்.........

..............................................

கையொப்பம்

# கடுக்காயின் சிறப்பும் அதன் குணமும்

சி. வை. வன்னியநாதன் R.A.M.P.
(சித்த வைத்தியர்)
சரசாலை – சாவகச்சேரி

சென்ற ஆனி மாத இதழில் வெளிவந்த இவ் விடயத்தில் கன்னம், களம், கண், நா, ஆண் குறி முதலிய இடங்களில் ஏற்படும் நோய்களுக்கு கடுக்காயை எப்படிப் பயன்படுத்த வேண்டும்? என்ற வினு எழுப்பப்பட்டது.

கடுக்காயைப் பலவிதமாக உபயோகிக்கும் முறையை விபரமாகக் கீழே தரப்படுகின்றது.

அதாவது:-

கடுக்காயைப் பற்களினுல் கடித்துத் தின்ருல் பசி தீபனத்தை அதிகப்படுத்தும்; இடித்துக் குளிர்ந்த நீரில் ஊறவைத்துப் பருகினுல் மலத் தைக் கட்டும்; வறுத்துப் பொடி செய்து உட் கொண்டால், வாத, பித்த கபங்களாகிய முத் தோஷங்களையும் போக்கும்; வறுத்துப் பொடி செய்த தூளை உணவோடு கலந்து உட்கொண்டு வரப் புத்தி விருத்தியும் தேக பெலமும் உண்டா கும்; பஞ்சேந்திரியங்கள் தெளிவடையும்; திரி தோஷ பிர கோபத்தைத் தணிக்கும்; மல சலங் களை ஒழுங்கு படுத்தும்.

மேலும், வெந்தயம் அவித்த கஷாயத்திற் திரிகடி கடுக்காய்ப் பொடி கலந்து உண்டுவரின் கன்னம், கழுத்து, கண், மேல்வாய், மர்மஸ் தானம் இவைகளைப் பற்றிய நோய்களும், யானைக்கால், அதிசார பேதி, கிரகணி, ரணம் முதலிய பல நோய்களும் தீரும்.

# இலங்கைச் சோதிட ஆய்வு மன்றக் கூட்டம்

மேற்படி மன்றத்தின் ஆனி மாதக் கூட்டம் 27-6-82ல் பண்டிதர் கே. என். நவரத்தினம் அவர் களின் தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மாலை 4-30 மணிக்கு ஆரம்பமாயிற்று.

சென்ற கூட்ட அறிக்கையும், பொருளாளர் அறிக்கையும் வாசித்தபின் புதிய அங்கத்தவர்கள் சேர்க்கப்பட்டார்கள். அதன் பின்பு சிறப்பு விரி வுரையாளராகிய திரு. நா. சச்சிதானந்தம் அவர் கள் சோதிடமும் மருத்துவமும் என்னும் தலைப் பில் உரை நிகழ்த்தினுர். சோதிடர்களுக்கும் வைத்தியர்களுக்கும் சகுனம் - நிமித்தம் மிகவும் முக்கிய காரணி என்று விளக்கப்பட்டது. வைத் திய சிகிச்சையில் வாரம், நாள், திதி, நட்சத்திரம், கரணம், யோகம் என்பன கவனிக்கப்பட வேண் டுமென்றுர் அதேபோல் சயனம், எண்ணை முழுக்கு, முடியிறக்கல் முதலியனவற்றிற்கும் காலநேரமுண்டென்றும் அவற்றைப் பேணுவதால் சௌக்கியத்தைப் பேணலாமென்றும் கூறப்பட் டது.

பின்பு இது விடயம் பற்றி கலந்துரையாடல் நடந்தது. பின்பு 6-45 மணியளவில் கூட்டம் நிறைவேறியது.

ஆவணி மாத சோதிட ஆய்வுமன்றக் கூட் டம் 29-8-82 பிற்பகல் 4 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும். அன்று பண்டிற் கே. என். நவரத்தினம் அவர்கள் "கல்வி யும் கோள்களும்" என்னும் பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

## ஆற்றல் மிகு சூரியனை அடிபணிவோம்!

ஆகாயக் கம்பளத்தே கம்பீரக் காட்சிதரும்
'அதிதி'பெற்ற புகழ்மகனை ஆட்சிதரும் தினகரனை
'ஆவணி'யின் அதிபதியை ஆற்றல்மிகு சூரியனை
அதிகாலை அடிபணிவோம் அதிகாரந்தனைப் பெறுவோம்!

வானத்துக் கூரையின்கீழ் வட்டமாய்க் கட்டழகாய்
பட்டு ஒளிக்கதிரைக் கொட்டும் சுடர்விளக்காய்
நானிலத்து இருளகற்றி நன்மைபல பொழிபவனை
'ஆவணி'யில் நோன்பிருந்து ஆயுளையும் அதிகரிப்போம்!

'சனி'யின் தந்தையினைத் தினமும் தொழுதிடுவோம்
தடைகள் அறுத்திடுவான்! தரணி ஆண்டிடலாம்!
யமனின் தந்தையவன் பாதம் பணிந்திடுவோம்
பகைகள் பறந்துவிடும்! பலமும் பிறந்துவிடும்!

"அன்புநெஞ்சன்"

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 4 முதற் பரிசு ரூ. 50/-

**போட்டி நிபந்தனைகள்**

1. கீழ்வரும் சதுரத்தைப் பூர்த்தி செய்து உங்கள் பெயர், முகவரியையும் எழுதி தபாலட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பவேண்டும்,
2. 1-9-1982க்குப்பின் கிடைக்கும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. சரியான விடையை அனுப்பி தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது அதிஷ்டசாலிக்கு ரூ. 50/. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு 6 மாத சோதிடமலரும், மூன்றுவது அதிஷ்டசாலிக்கு 8 மாதச் சோதிடமலரும் இனும்.
4. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல· 4
சோதிடமலர்
மட்டுவில் — சாவகச்சேரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ச | 2 கு | 3 க் | 4 ர | 5 ம் | ■ |
| 7 ந் | 8 ச | 9 தி | 10 கி | 11 ங் | 12 ரா |
| 13 தி | 14 தி | ■ | 16 மு | 17 டி | 18 ம் |
| 19 ன் | ■ | 21 கு | 22 ம் | 23 ப | ■ |
| 25 ர | 26 கி | 27 தி | ■ | 29 இ | ■ |
| ■ | ■ | 33 ரு | 34 ம் | 35 கு | 36 பு |

பெயர் [illegible]

விலாசம் [illegible]

[illegible]

**இடமிருந்து வலம்**

1. வண்டியோட குழம்பியுள்ள இது இரண்டு அவசியம்.
7. சூரியன் ஒரு ராசியிலிருந்து அடுத்த ராசிக்குப் பிரவேசிப்பதை மாறியுள்ள இச்சொல்லால் அழைக்கப்படும்.
13. பஞ்சாங்கங்களில் இதுவுமோர் அங்கம்.
16. தனி...... தோப்பாகுமா?
21. இறுதியில் 'ம்' சேர உங்கள் இராசியாகவும் அமைந்துவிடலாம்.
25. மன்மதனின் மனைவிக்கு மயக்கம் கூடிவிட்டது.
33. குழம்பியுள்ள இது தின்னக் கைக்கூலி வேண்டுமா?

**மேலிருந்து கீழ்**

1. இடபராசியில் உச்சமும், கடகராசியில் ஆட்சியும் பெறும் இக்கிரகம் ஒழுங்கின்றி நிற்கிறது.
2. மாறியுள்ள இதிலேயே தாமரை வளரும்
3. தலைகீழாயுள்ள இதன் ஈற்றில் 'கு' சேர திசை அமைந்துவிடும்.
4. ஒழுங்கைக் குறிக்கும் சொல் ஒழுங்கற்று நிற்கிறது.
5. எந்த இரகசியத்தையும் குழம்பியுள்ள இப்படி ஆக்குலதில் பெண்களுக்கு நிகர் பெண்களே.
12. இச்சொல்லின் இடையில் 'க' சேர இசை வந்துவிடும்.
21. மாறியுள்ள இது மனிதனுக்கு அதிகரிக்கவும் கூடாது; குறையவும் கூடாது என்பது வைத்தியர்களின் முடிபு.

**குறுக்கெழுத்துப் போட்டி இல 3- இன் விடை**

இடமிருந்து வலம்

1. கிரகமாலிகை 7. அங்காரகன் 15. கனி
22. பல்லி 25. பங்கயம் 32. குருகுலம்.

மேலிருந்து கீழ்

1. கிரகணம் 2. கர 3. கன்னி 4. மாங்கல்யம் 5. காலி
6. அகலிகை 23. பங்கு 26. கரு 27. பல.

பரிசில் பெறுவோர்:

1-ம் பரிசு:- சு. ஜெகதீபன்
காகித ஆலை, வாழைச்சேனை.

2-ம் பரிசு:- கி. அரசரத்தினம
சங்குவேலி, மானிப்பாய்.

3-ம் பரிசு:- சியாமளா கந்தையா
217, டீன்ஸ் றோட், கொழும்பு-10

நூற்றுக்கணக்கான அன்பர்கள் சரியான விடை எழுதியுள்ளார்கள்; இதில் பங்குகொண்ட அனைவருக்கும் "சோதிடமலரின்" நன்றிகள்.

வர்த்தக ஸ்தாபனங்களின் விற்பனையைப்
பெருக்கிடும் விளம்பர சேவை

# மணிக்குரல்

## விளம்பர சேவை

பஸ் நிலையம் — யாழ்ப்பாணம்

**மதுரகான இசையுடன் மனதைக் கவரும்
விளம்பர அறிவிப்புகள்**

அறிவிப்பாளர்: மேஜர் ஷண்

அடுத்த இதழை அலங்கரிக்கும் புது அம்சங்கள்

* ஜனாதிபதித் தேர்தல்
* இராகு கேதுக்கள் கிரகங்களா?
* சோதிடம் கற்போம்

(இக்கட்டுரை மூலம் அத்திவாரத்திலிருந்து சோதிடம் கற்பிக்கட்படும். கிரகஸ்புடம், பாவஸ்புடம் கணிக்கும் முறைகள் படிப்படியாக வெளிவரும்.)

உங்கள் பிரதிக்கு உள்ளூர் ஏஜண்டுகளிடம்
இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka. No. Q: B. 59/300/183/82

மில்க்வைற் ஆதரவாளரின்
நயமும் பயனும் கருதிய

# மில்க்வைற் சிறிய பார்சோப்

தொலைபேசி: 7233 தந்தி: மில்க்வைற்

வி. எம். கே. அடையாளமிட்ட சிறிய பார்சோப் தூய்மைக்கு உத்தரவாத
முள்ளது. துண்டு துண்டுகளாகவும் வெட்டிப்பயன்படுத்தலாம்.
நிரம்பிய ஆதாயமுள்ளது. எங்கும் கிடைக்கும். மில்க்
வைற் சோப்பை வாங்கி ஆதரவளியுங்கள்.

## பாவனையாளர் நலன் கருதி வெளியிடும்

## மில்க்வைற் தொழிலகம் — யாழ்ப்பாணம்

## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்.

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சேர்திடமலர்' என்றும் வாடாமலராக உங்கள் இல்லங்களில் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பது எமது அவா. தாங்கள் ஒவ்வொருவரும் புதுப்புது அங்கத்தவர்களை அறிமுகம் செய்து வைத்தால் மலரின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்களாவீர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | | வருட சந்தா | ரூ 39-60 |
| | வெளிநாட்டுக்கு | (கப்பல்வழி) | வருட சந்தா | ,, 70-00 |
| | இந்தியா | (விமான வழி) | வருட சந்தா | ,, 96-00 |
| | மலேசியா | (விமான வழி) | வருட சந்தா | ,, 126 00 |
| | இங்கிலாந்து | (விமான வழி) | வருட சந்தா | ,, 150-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூ. 3-30 அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 200